
# Climate Change

## Glossary (TAMIL)

INDIAN INSTITUTE FOR
HUMAN SETTLEMENTS



**Compiled by:**

Kaavya Pradeep Kumar, IIHS Word Lab
Chandni Singh and Ritwika Basu, IIHS Practice
Preedip Balaji, IIHS Library

**Translated by:**

Subagunam Kannan

**Design & Layout:**

IIHS Design Team

**DOI:** https://doi.org/10.24943/CCGEMTHK02.2021

**KG Link:** https://iihs.co.in/knowledge-gateway/climate-change-glossary/

## Process followed

1. The team compiled the list of glossary terms, based on the IPCC special report (IPCC, 2012), and IPCC Assessment report 5, Working Groups I, II and III reports (IPCC, 2013; IPCC, 2014; and a special report (IPCC, 2018).
2. The terms identified were prioritised based on their importance for teaching, and hence categorised as high, medium and low. This is a comprehensive glossary that is more than sufficient for learners who are newly acquainted with the subject.
3. Certain terms from the IPCC glossaries were excluded mainly because of how much their definitions overlapped with others in the glossary. For e.g., 'climate extreme' was not included in the final list because the term 'extreme weather' was already in place. It is a more commonly used term and hence more applicable to learners.
4. The IPCC list also covered generic terms such as 'chronology' and 'coping'; the definitions for which had already been included in other glossaries such as the one on disaster risk and resilience. To reduce overlap, we excluded those as well.
5. The level of specificity and frequency of use of some terms also played a factor in their exclusion. While the final list covers a vast majority of definitions provided by the IPCC, terms such as 'adaptation options', 'adaptation management' were dropped in favour of more commonly-used ones such as 'adaptation limit', 'adaptation needs'.
6. We also checked the Synthesis Report (IPCC, 2014), which had a lot of definitions that were missing in the sources mentioned in point 1, including fundamental climate science terms such as 'ENSO', 'afforestation', 'albedo', 'ocean acidification' and 'radiative forcing'. Additionally, common policy terms such as 'climate finance', 'fuel poverty', 'REDD+' and 'energy access' were also drawn from the 2014 Synthesis Report.
7. In addition to the IPCC, we also skimmed through other public platforms such as the BBC and the Climate Reality Project, as well as other educational institutions' compilations (UC Davis) to double-check if there were some basic terms that the UN sources did not have. Terms such as the 'UNFCCC', the 'IPCC' itself, 'climate science' and 'weather' were added as a result.

## References


BBC. (2014, April 13). Climate change glossary. https://www.bbc.com/news/science-environment-11833685

IPCC, 2012: Glossary of terms. In: Managing the Risks of Extreme Events and Disasters to Advance Climate Change Adaptation [Field, C.B., V. Barros, T.F. Stocker, D. Qin, D.J. Dokken, K.L. Ebi, M.D. Mastrandrea, K.J. Mach, G.-K. Plattner, S.K. Allen, M. Tignor, and P.M. Midgley (eds.)]. A Special Report of Working Groups I and II of the Intergovernmental Panel on Climate Change (IPCC). Cambridge University Press, Cambridge, UK, and New York, NY, USA, pp. 555-564.

IPCC, 2013: Annex III: Glossary [Planton, S. (ed.)]. In: Climate Change 2013: The Physical Science Basis. Contribution of Working Group I to the Fifth Assessment Report of the Intergovernmental Panel on Climate Change [Stocker, T.F., D. Qin, G.-K. Plattner, M. Tignor, S.K. Allen, J. Boschung, A. Nauels, Y. Xia, V. Bex and P.M. Midgley (eds.)]. Cambridge University Press, Cambridge, United Kingdom and New York, NY, USA, pp. 1447-1465.

Allwood J. M., V. Bosetti, N. K. Dubash, L. Gómez-Echeverri, and C. von Stechow, 2014: Glossary. In: Climate Change 2014: Mitigation of Climate Change. Contribution of Working Group III to the Fifth Assessment Report of the Intergovernmental Panel on Climate Change [Edenhofer, O., R. Pichs-Madruga, Y. Sokona, E. Farahani, S. Kadner, K. Seyboth, A. Adler, I. Baum, S. Brunner, P. Eickemeier, B. Kriemann, J. Savolainen, S. Schlömer, C. von Stechow, T. Zwickel and J.C. Minx (eds.)]. Cambridge University Press, Cambridge, United Kingdom and New York, NY, USA, pp. 1249-1279.

IPCC, 2018: Annex I: Glossary [Matthews, J.B.R. (ed.)]. In: Global Warming of 1.5°C. An IPCC Special Report on the impacts of global warming of 1.5°C above pre-industrial levels and related global greenhouse gas emission pathways, in the context of strengthening the global response to the threat of climate change, sustainable development, and efforts to eradicate poverty [Masson-Delmotte, V., P. Zhai, H.-O. Pörtner, D. Roberts, J. Skea, P.R. Shukla, A. Pirani, W. Moufouma-Okia, C. Péan, R. Pidcock, S. Connors, J.B.R. Matthews, Y. Chen, X. Zhou, M.I. Gomis, E. Lonnoy, T. Maycock, M. Tignor, and T. Waterfield (eds.)]. World Meteorological Organization, Geneva, Switzerland, pp. 541-562.

IPCC, 2014: Annex II: Glossary [Mach, K.J., S. Planton and C. von Stechow (eds.)]. In: Climate Change 2014: Synthesis Report. Contribution of Working Groups I, II and III to the Fifth Assessment Report of the Intergovernmental Panel on Climate Change [Core Writing Team, R.K. Pachauri and L.A. Meyer (eds.)]. IPCC, Geneva, Switzerland, pp. 117-130.

IPCC, 2014: Annex II: Glossary [Agard, J., E.L.F. Schipper, J. Birkmann, M. Campos, C. Dubeux, Y. Nojiri, L. Olsson, B. Osman-Elasha, M. Pelling, M.J. Prather, M.G. Rivera-Ferre, O.C. Ruppel, A. Sallenger, K.R. Smith, A.L. St. Clair, K.J. Mach, M.D. Mastrandrea, and T.E. Bilir (eds.)]. In: Climate Change 2014: Impacts, Adaptation, and Vulnerability. Part B: Regional Aspects. Contribution of Working Group II to the Fifth Assessment Report of the Intergovernmental Panel on Climate Change [Barros, V.R., C.B. Field, D.J. Dokken, M.D. Mastrandrea, K.J. Mach, T.E. Bilir, M. Chatterjee, K.L. Ebi, Y.O. Estrada, R.C. Genova, B. Girma, E.S. Kissel, A.N. Levy, S. MacCracken, P.R. Mastrandrea, and L.L. White (eds.)]. Cambridge University Press, Cambridge, United Kingdom and New York, NY, USA, pp. 1757-1776.

UC Davis Science & Climate. (2020, July 21). Climate change terms and definitions. https://climatechange.ucdavis.edu/science/climate-change-definitions/

UNFCCC. (2020). Glossary of climate change acronyms and terms https://unfccc.int/process-and-meetings/the-convention/glossary-of-climate-change-acronyms-and-termss

| Glossary Term | Definition | Source |
|---|---|---|
| எச்சரிக்கையற்ற காலநிலை மாற்றம் | சில பத்தாண்டுகளிலோ அல்லது அதற்கும் குறைவான காலகட்டத்திலோ, காலநிலை அமைப்பில் ஏற்படுகின்ற மிகப்பெரிய அளவிலான மாற்றங்கள், மேலும் சில பத்தாண்டுகளுக்கு நீடித்து (அல்லது நீடிக்குமென்று கணிக்கப்பட்டு), அந்த மாற்றம் மனிதர்கள் மற்றும் இயற்கை அமைப்பின் மீது கணிசமான சேதங்களை ஏற்படுத்துதல். | AR5 WG1 |
| தகவமைத்தல் | நிகழ்கின்ற காலநிலைக்கு அல்லது நிகழுமென்று கணிக்கப்படுகின்ற காலநிலைக்கு மற்றும் அதன் விளைவுகளுக்கு ஏற்ப சீரமைந்துகொள்ளுதல். மனித அமைப்புகளில், பாதிப்புகளைச் சமாளித்தல் அல்லது தவிர்த்தல் அல்லது பயன்தரக்கூடிய வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளுதல் போன்றவை தகவமைத்தலைக் குறிக்கின்றன. சில இயற்கை அமைப்புகளில் மனிதத் தலையீடுகள், எதிர்பார்க்கப்படுகின்ற காலநிலைக்கும் அதன் விளைவுகளுக்குமான சீரமைவின் தேவையை உண்டாக்குகின்றன.<br>அ) கூடுதல்முறை தகவமைத்தல்: ஓர் அமைப்பினுடைய முழுமை மற்றும் அதன் அடிப்படைச் சாரத்தைப் பேண வேண்டுமென்பதை மைய நோக்கமாகக் கொண்ட தகவமைப்பு நடவடிக்கைகள்<br>ஆ) மாற்றிலக்கண தகவமைத்தல்: ஓர் அமைப்பினுடைய அடிப்படை இயல் பண்புகளை, மாறுகின்ற காலநிலைக்கும் அதன் விளைவுகளுக்கும் ஏற்ப மாற்றக்கூடிய தகவமைத்தல் முறை. | AR5 WG2 |
| தகவமைத்தல் மதிப்பீடு | காலநிலை மாற்றத்திற்குத் தகுந்த விதத்தில் தகவமைத்துக் கொள்ள இருக்கின்ற வாய்ப்புகளைக் கண்டுபிடித்து, அவற்றை கிடைப்புத்திறன், பயன்கள், செலவீனம், திறன், இயலுமை ஆகியவற்றின் அடிப்படையில் அந்தத் தகவமைப்பு திட்டம் சாத்தியமா என்பதை மதிப்பீடு செய்தல் | AR5 WG2 |
| தகவமைப்புத் திறம் | அமைப்புகள், நிறுவனங்கள், மனிதர்கள் மற்றும் இதர உயிரினங்களின் உள்ளுரவுள்ள சேதங்களுக்குச் சீரமைவு செய்துகொள்ளக்கூடிய, வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கான, ஏற்படக்கூடிய விளைவுகளுக்கு எதிர்செயலாற்றுகின்ற ஆற்றல். | AR5 WG2 |
| தகவமைப்புப் பற்றாக்குறை | மாநிலங்களுக்கும் கட்டமைப்புகளுக்கு இடையே நிலவுகின்ற காலநிலைச் சூழல் மற்றும் மாறுபாடுகளால் ஏற்படும் மோசமான பாதிப்புகளைக் குறைப்பதில், இருக்கும் இடைவெளி. | AR5 WG2 |
| தகவமைப்புத் தேவைகள் | காலநிலை பாதிப்புகளுக்கு | AR5 WG2 |

| Glossary Term | Definition | Source |
| --- | --- | --- |
| | எதிர்வினையாக மக்கள்தொகையின், உடைமைகளின் பாதுகாப்பை உறுதி செய்தாக வேண்டிய சூழ்நிலைகள். | |
| தகவமைப்புப் புறக்கட்டுப்பாடுகள் | தகவமைப்பு நடவடிக்கைகளைத் திட்டமிடுவதை, அமல்படுத்துவதைத் தடுக்கக்கூடிய, வாய்ப்புகளைக் கட்டுப்படுத்துகின்ற காரணிகள். | AR5 WG2 |
| தகவமைப்பு வரம்பு | தவிர்க்கமுடியாத ஆபத்துகளால் நோக்கங்களையும் தேவைகளையும் தகவமைப்பு நடவடிக்கைகள் மூலமாகப் பாதுகாக்க முடியாது என்ற கட்டம். அ) கடின தகவமைப்பு வரம்பு: வரக்கூடிய ஆபத்துகளை எந்தவித தகவமைப்பு நடவடிக்கை மூலமும் தவிர்க்க முடியாது. ஆ) மெல்லிய தகவமைப்பு வரம்பு: ஆபத்துகளைத் தவிர்க்கக்கூடிய வாய்ப்புகளை வழங்கக்கூடிய தகவமைப்பு நடவடிக்கைகள் தற்போது கைவசம் இல்லாமலிருத்தல். | AR5 WG2 |
| தகவமைப்பு நிர்வாகம் | திட்டமிடுதல் அமல்படுத்துதல், மீள்செய்கை சமூகக் கற்றல் மூலமாக இயற்கை வளங்களைப் பயன்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல் குறித்த கொள்கை மதிப்பீடு, சூழலியல் சேவைகள், பொதுவான இயற்கை வளங்கள் ஆகியவை குறித்த சமூகக் கற்றலை, குறிப்பாக சிக்கலான, நிச்சயமற்ற சூழ்நிலைகளில் முதன்மையாகக் கொண்ட, முறைசார் மற்றும் முறைசாராத நிர்வாகத்திற்கான நிறுவனங்களைக் குறிக்கின்ற, சூழலியல் இலக்கியத்தில் வளர்ந்து வருகின்ற பதம்., | SR1.5 |
| தூசுப்படலம் | சில நானோமீட்டர் முதல்10 மைக்ரோமீட்டர் வரை குறிப்பிடத்தக்க அளவில் வளிமண்டலத்தில் பல மணிநேரங்களுக்குத் தங்கியிருக்கக்கூடிய திட மற்றும் திரவப் பொருள்கள், துகள்கள் மட்டுமின்றி வாயுக்களையும் குறிக்கும் இந்தப் பதம் அறிக்கைகளில் பெரும்பாலும் பன்மையில் தூசுப்படலத் துகள்கள் என்றே குறிப்பிடப்படுகின்றது. இந்தத் தூசுப்படலத்தின் உருவாக்கத்திற்கான காரணம் இயற்கையானதாகவோ அல்லது மனிதக் காரணிகளாகவோ இருக்கலாம். இந்தத் தூசுப்படலம் காலநிலையின்மீது பல விதங்களில் செல்வாக்கு செலுத்துகின்றது: கதிர்வீச்சு உறிஞ்சுதல் மற்றும் சிதறலின்போது நடக்கின்ற செயல் எதிர்செயல்கள், மேகத்தின் நுண் இயற்பியல் மற்றும் இதர பண்புகளில் நடக்கின்ற செயல் எதிர்செயல்கள், அல்லது பனி மூடிய பரப்பின்மீது படியும் வண்டல்கள் அவற்றுடைய சூரியக்கதிர் எதிரொளிப்பு விகிதத்தை மாற்றியமைப்பது மற்றும் காலநிலைப் | SR1.5 |

| Glossary Term | Definition | Source |
|---|---|---|
| | பின்னூட்டத்தில் பங்கு வகிப்பது போன்ற வழிகளில் இந்தத் தூசுப்படலம் காலநிலையில் தன் செல்வாக்கைச் செலுத்துகின்றது. | |
| காடுவளர்ப்பு | வரலாற்றில் காடின்றி இருந்த நிலத்தில் புதிதாகக் காடுகளை வளர்ப்பது. காடு மற்றும் அதுதொடர்பான பதங்களான காடு வளர்ப்பு, காடு மீள்வளர்ப்பு, காடழிப்பு ஆகியவறை குறித்த விவாதத்திற்கு, நிலப் பயன்பாடு, நிலப் பயன்பாட்டு மாற்றம் மற்றும் கானியல் குறித்த காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேசக் குழுவினுடைய சிறப்பு அறிக்கையைப் பார்க்கவும் (IPCC, 2000b). | AR5 SYR |
| காற்று மாசுபாடு | வளிமண்டலத்தில், மனிதத் தலையீடுகளாலோ வேறு ஏதேனும் இயற்கைக் காரணங்களாலோ நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆரோக்கியம், இயற்கை, சுற்றுச்சூழல் ஆகியவற்றின்மீது மோசமான பாதிப்புகளை உண்டாக்கக்கூடிய தூசுப்படலம், வாயு போன்றவை கலப்பதால் காற்றின் தரம் மோசமடைதல். | SR1.5 |
| சூரியக்கதிர் எதிரொலிப்பு விகிதம் | மேற்பரப்பிலிருந்தோ அல்லது ஏதேனும் பொருளிலிருந்தோ எதிரொலிக்கும் சூரியக் கதிர்களின் பின்னம், எப்போதும் குறிப்பிட்ட சதவிகிதத்தில் கூறப்படுகின்றன. பனி படர்ந்த பரப்பில் அதிக சூரியக் கதிர் எதிரொலிப்பு விகிதம் இருக்கும், மண் பரப்பில் குறைந்தபட்சம் முதல் அதிகபட்சம் வரையாக அந்த விகிதம் இருக்கும் மற்றும் பெருங்கடல்களிலும் தாவரங்கள் மூடிய நிலப்பரப்பிலும் சூரியக் கதிர் எதிரொலிப்பு விகிதம் குறைவாக இருக்கும். பூமியில் சூரிய எதிரொலிப்பு விகிதம் இப்படியாக மேகமூட்டங்கள், பனிமூட்டம், பனிக்கட்டி, பசுமைப் பரப்பு, நிலப்பரப்பு ஆகியவற்றில் ஏற்படுகின்ற மாற்றங்களைப் பொறுத்து மாறுபடும். | AR5 SYR |
| மானுட ஆதிக்கக் காலகட்டம் | பூமியின் அமைப்பு, செயல்பாடுகள், காலநிலை அமைப்பு உட்பட அனைத்திலும் மனிதர்களுடைய ஆதிக்கம் நிறைந்திருக்கும் இந்தப் புதிய காலகட்டமே மானுட ஆதிக்கக் காலகட்டம். பூமியின் அமைப்பு குறித்த அறிவியல் சமூகத்தில் 2000-ம் ஆண்டு முன்மொழியப்பட்டது. முன்மொழியப்பட்ட இந்தக் கூற்று, புவியியல் சமூகங்களின் மத்தியில், மனித நடவடிக்கைகளால் பூமியின் அமைப்பு மாற்றப்பட்டது குறித்து, ஹோலோசீன் காலகட்டத்தின் புவியியல் படிமங்களுடைய உருவாக்கத்திற்கான தனித்துவமான குறியீடுகளைக் கொண்ட பாறை அடுக்கியல் தொடர்பான | SR1.5 |

| Glossary Term | Definition | Source |
|---|---|---|
| | ஆதாரங்களின் அடிப்படையில் ஒழுங்குபடுத்துதல் செயல்முறைக்கு உள்ளாக்கப்படுகின்றது. | |
| மனிதச் செயல்வழி | மனித நடவடிக்கைகளால் ஏற்படுகின்ற அல்லது மனிதர்கள் உருவாக்குகின்ற சூழல். | SR1.5 |
| மனிதச் செயல்வழி உமிழ்வுகள் | மனித நடவடிக்கைகளால் வெளியிடப்படுகின்ற பசுமை இல்ல வாயுக்கள், பசுமை இல்ல வாயுக்களின் முன்னோடி மற்றும் தூசுப்படலங்கள். புதைபடிம எரிபொருள்களை எரித்தல், காடழிப்பு, நிலப்பயன்பாட்டில் மாற்றங்கள், கால்நடை உற்பத்தி, வளமாக்கல், கழிவு மேலாண்மை, தொழிற்சாலைச் செயல்பாடுகள் ஆகியவை இந்த நடவடிக்கைகளில் அடக்கம். | AR5 WG2 |
| மனிதச் செயல்வழி நீக்கம் | மனிதத் தலையீடுகளால் வளிமண்டலத்தில் வலிய வெளியிடப்பட்ட பசுமை இல்ல வாயுக்களைத் திரும்பக் கிரகித்தல். கரிம வாயுவை மூழ்கடிக்கக்கூடிய உயிரியல் தொட்டிகளை அதிகரித்தல், வேதிம பொறியியல் உதவியோடு, அதை நீண்டகாலத்திற்குரிய கரிம வாயு நீக்கம் மற்றும் சேமிப்புச் செயல்முறையை அடைதல் ஆகியவையும் அடக்கம். தொழிற்சாலை மற்றும் ஆற்றல் தொடர்பான கரிமங்களைக் கவர்ந்து சேமித்து வைத்தல், வளிமண்டத்திலுள்ள கரிம வாயுவை மட்டும் அகற்றுவதில்லை, உயிரி ஆற்றல் உற்பத்தியோடு ஒன்றிணைக்கப்பட்டால், வளிமண்டல கரிம வாயுவைக் குறைக்கவும் முடியும். | SR1.5 |
| அடிப்படை/மேற்கோள் | மாற்றங்களை எந்த அளவுகோலின்படி அளவிடுகிறோம் என்பதை அளப்பதற்கு உதவுவதே அடிப்படை. பிறழ்வுகளைக் கணக்கிடுவதற்காகப் பயன்படுவதே அடிப்படைக் காலம். நுண்ணளவு வாயுவினுடைய அடிப்படைச் செறிவு என்பது, மனித வெளியீடுகளால் ஆட்கொள்ளப்படாத பகுதியில் கணக்கிடப்படும் அளவு. | AR5 WG1 |
| பல்லுயிர்ச்சூழல் | நிலம், நீர் மற்றும் இதர சூழலியல் பகுதிகளில் வாழ்கின்ற பல்வேறு விதமான உயிரினங்களின் தொகுப்பு. மரபணு, உயிரின வகைகள் மற்றும் சூழலியல் அளவுகள் உட்பட அனைத்துமே பல்லுயிர்ச்சூழல் எனப்படும். | AR5 SYR |
| உயிரி எரிவாயு | பொதுவாக, திரவ நிலையில் இருக்கின்ற, உயிரினத்தொகுதியிலிருந்து உருவாக்கப்படுகின்ற ஓர் எரிவாயு. கரும்பு, சோளம் ஆகியவற்றிலிருந்து எடுக்கப்படுகின்ற உயிரி எரிசாராயம், கடுகு அல்லது சோயா பீன்ஸிலிருந்து எடுக்கப்படுகின்ற உயிரிடீசல் மற்றும் | SR1.5 |

| Glossary Term | Definition | Source |
|---|---|---|
| | காகித உற்பத்திச் செயல்முறையில் கிடைக்கின்ற கருஞ்சாராயம் ஆகியவை இதில் அடங்கும். | |
| வழக்கமான வியாபாரம் | இயக்க நடைமுறைகள் மற்றும் கொள்கைகள் ஆகியவற்றின் அடிப்படையிலான வழக்கமான வியாபாரத்தின் திட்ட ஏற்பாடுகள். வழக்கமான வியாபாரத்திற்கான சில பிரத்யேகச் சூழ்நிலைகளை அடிப்படைச் சூழலோடு இணைத்துக்கொள்ளும்போது, வழக்கமான வியாபாரங்களுக்கான சூழ்நிலைகள் அமலில் இருக்கும் நடைமுறைகள் அல்லது கொள்கைகளைவிட வேறு எதுவும் இருக்காது என்பதை வெளிப்படுத்துகின்றன. | AR5 WG2 |
| கன்குன் ஒப்பந்தங்கள் | ஐக்கிய நாடுகள் அமைப்பினுடைய காலநிலை மாற்றத்திற்கான கட்டமைப்பு குறித்த 16வது மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் தொகுப்பு. அதில், பலவற்றோடு சேர்த்து, புதிதாகநிறுவப்பட்ட பசுமை காலநிலை நிதியம், புதிய தொழில்நுட்பங்கள், தகவமைப்பு, காலநிலை மாற்றத்தை மட்டுப்படுத்துவதற்கான திட்டமிடல், பூமியின் மேற்பரப்பு தட்பவெப்பநிலையை 2 டிகிரி செல்ஷியஸுக்கும் மேலே அதிகரிக்கவிடாமல் தடுப்பது, சர்வதேச ஆதரவோடு மட்டுப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடுகின்ற நாடுகளின் அளவீடுகள், அறிக்கை, உண்மைகளைச் சரிபார்த்தல் ஆகியவற்றுக்கான உடன்படிக்கை. | AR5 SYR |
| திறன் | ஒரு தனிமனிதருக்கோ சமூகத்திற்கோ நிறுவனத்திற்கோ குறிப்பிட்ட இலக்கை அடைவதற்குத் தேவைப்படுகின்ற வலிமை, இயற்பண்புகள் மற்றும் வளங்கள் எந்தளவுக்கு இருக்கின்றது என்பதைக் குறிப்பது. | SREX |
| திறன் மேம்படுத்தல் | ஒரு தனிமனிதருக்கோ, சமூகத்திற்கோ, சமுதாயத்திற்கோ, நடைபெறும் மாற்றத்திற்கு ஏற்ப இருக்கின்ற திறன், இயற்பண்புகள் மற்றும் வளங்களை மேம்படுத்துவதற்கான பயிற்சிகள். | AR5 WG2 |
| கரிம சுழற்சி | கரிம ஓட்டத்தைக் கண்காணிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் சொற்கூறுகள். உதாரணத்திற்கு, வளிமண்டலத்தில், பெருங்கடல்களில், கடல்சார் உயிர்க்கோளம், கற்கோளம் மற்றும் நிலப்பகுதியிலுள்ள கரிம வாயுவைக் குறிக்கும். | AR5 SYR |
| கரிம வாயு சிறைபிடித்தல் மற்றும் சேமிப்பு | தொழிற்சாலை மற்றும் ஆற்றல் தொடர்பான வேலைகளின் மூலமாக வெளிப்படுகின்ற தூய்மையான கரிம வாயுவை தனித்தனியாகப் பிரித்து, சுருக்கி, குளுமைப்படுத்தி, வளிமண்டலத்திலிருந்து | SR1.5 |

| Glossary Term | Definition | Source |
| --- | --- | --- |
| | நீண்டகாலத்திற்குத் தனிமைப்படுத்தி வைக்கக்கூடிய சேமிப்புப் பகுதிக்கு அனுப்பி வைத்தல். இது சில நேரங்களில் கரிம வாயு சிறைபிடித்தல் மற்றும் சேமித்தல். | |
| கரிம வரி | புதைபடிம எரிபொருள்களிலுள்ள கரிம அளவைப் பொறுத்து வசூலிக்கப்படுகின்றது. ஏனெனில், மறைமுகமாக, புதைபடிம எரிபொருள் பயன்படுத்தும்போது, அதிலுள்ள அனைத்துக் கரிமங்களும் கரிம வாயுவாக வெளியேறுகின்றன. எரிபொருளிலிருந்து எந்தளவில் கரிம வாயு வெளியேறுகின்றது என்பதைப் பொறுத்து கரிம வரி விதிக்கப்படுகின்றது. | AR5 SYR |
| தூய்மை வளர்ச்சிப் பொறிமுறை | இதுவொரு நீளமான மற்றும் குழப்பமான வரையறை. 'இணைப்பு-1', 'இணைப்பு-2' போன்ற பதங்களைப் பயன்படுத்திக் கொள்வதையே பரிந்துரைக்க விரும்புகின்றோம். காலநிலை மாற்றத்திற்கான தொழில்நுட்பப் பதங்களுக்குரிய பேச்சுவழக்கு வார்த்தைகளாக அறியப்படுகின்றன. வளர்ந்த நாடுகளுடைய அதிக உமிழ்வுகள் மற்றும் இதர விஷயங்களைக் குறிப்பிடுகின்றது. | SR1.5 |
| காலநிலை | ஒரு குறுகிய அர்த்தத்தில் பார்த்தால், காலநிலை என்பதற்குப் பொதுவாக சராசரி வானிலை எனவே வரையறுக்கப்படுகின்றது, அல்லது இன்னும் கடுமையாக, மாதங்கள் முதல் ஆயிரக்கணக்கான அல்லது மில்லியன் கணக்கான ஆண்டுகள் வரையிலான காலப்பகுதியில் சம்பந்தப்பட்ட அளவுகளின் சராசரி மற்றும் மாறுபாட்டின் அடிப்படையிலான புள்ளிவிவர விளக்கம். இதில் உலக வானிலை ஆய்வு மையத்தின்படி, பாரம்பர்யமாக 30 ஆண்டுக் காலகட்டத்தைச் சராசரியாக வைத்து நிர்ணயிக்கப்படுகின்றது. வெப்பநிலை, மழைப்பொழிவு, காற்று ஆகிய மேற்பரப்பு மாறிகளைப் பொறுத்து அது நிர்ணயிக்கப்படுகின்றது. ஒரு பரந்த பார்வையில், காலநிலை என்பது ஒரு நிலை, காலநிலை அமைப்புக்கான புள்ளியியலுக்குரிய விளக்கம். | SR1.5 |
| காலநிலை மாற்றம் | காலநிலை மாற்றம் என்பது காலநிலையில் ஏற்படுகின்ற மாற்றத்தைக் குறிக்கின்றது. இது காலநிலையின் பண்புகளில் ஏற்படுகின்ற மாறுபாடுகளால் (புள்ளிவிவர ஆய்வுகளின்படி) அடையாளம் காணப்படுகின்றது. மேலும் இது நீண்டகாலத்திற்கு நீடிக்கும். பொதுவாக, சில பத்தாண்டுகள் அல்லது அதற்கும் மேலாக நீடித்திருக்கும். இயற்கையான உள் | AR5 WG2 |

| Glossary Term | Definition | Source |
| --- | --- | --- |
| | செயல்முறைகள் அல்லது சூரிய சுழற்சிகளின் மாற்றங்கள், எரிமலை வெடிப்புகள் மற்றும் மனிதத் தலையீடுகளால் வளிமண்டலத்தின் கலவையில் ஏற்படுகின்ற மாற்றங்கள் அல்லது நிலப் பயன்பாட்டில் ஏற்படுகின்ற மாற்றங்கள் போன்றவை காலநிலை மாற்றத்திற்குக் காரணமாக இருக்கலாம். ஐக்கிய நாடுகள் சபையுடைய காலநிலை மாற்றம் குறித்த கட்டமைப்பிற்கான மாநாட்டின் உட்பிரிவி 1-ன்படி, காலநிலை மாற்றம்: "உலகளவில் நேரடியாகவோ மறைமுகமாகவோ மனிதத் தலையீடுகளால், மானுடவியல் காரணங்களால் வளிமண்டலத்தின் கலவையில் ஏற்படுகின்ற மாற்றங்கள் மற்றும் கூடுதலாக, ஒப்பீட்டிற்கு எடுக்கப்பட்ட குறிப்பிட்ட காலகட்டத்தில் இயற்கையான காலநிலையில் பதிவு செய்யப்பட்டுள்ள மாற்றங்கள்:" என்று வரையறுக்கப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் சபையுடைய காலநிலை மாற்றம் குறித்த கட்டமைப்பிற்கான மாநாடு, மனித நடவடிக்கைகளால் வளிமண்டலத்தில் நிகழ்கின்ற மாற்றங்களையும் இயற்கைக் காரணங்களால் காலநிலையில் நடைபெறுகின்ற மாற்றங்களையும் வேறுபடுத்திக் காட்டுகின்றது. | |
| காலநிலை பின்னூட்டம் | ஒரு காலநிலையில் உள்ள உலைவு (சுற்றுப்பாதை), இரண்டாவது காலநிலையில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது மற்றும் இரண்டாவது காலநிலையில் நடக்கின்ற மாற்றங்கள் இறுதியில் முதல் காலநிலையில் கூடுதல் மாற்றத்திற்கு வழிவகுக்கின்றது. ஆரம்பக்கட்ட உலைவு (சுற்றுப்பாதை), அதில் ஏற்படுகின்ற மாற்றங்களால் வருவதே எதிர்மறை பின்னூட்டம்; அதே ஆரம்பக்கட்ட உலைவு மேம்படுத்தப்படும்போது கிடைப்பதே நேர்மறையான பின்னூட்டம். ஆரம்பக்கட்ட உலைவு என்பது வெளிப்புற விசையாகவோ அல்லது உள்மாறுபாட்டின் ஒரு பகுதியாகவோ எழலாம். | SR1.5 |
| காலநிலை நிதி | காலநிலை நிதிக்கென்று ஒப்புக்கொள்ளப்பட்ட விளக்கம் என்று எதுவும் இல்லை. உலகளவில் காலநிலை மாற்றத்திற்கு எதிர்செயலாற்றுவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட நிதி ஆதாரங்களுக்கும் காலநிலை மாற்றத்தில் எதிர்செயலாற்றுவதில் வளரும் நாடுகளுக்குத் தேவைப்படுகின்ற நிதிக்கும் காலநிலை நிதி என்ற பதம் பயன்படுத்தப்படுகின்றது. இந்த மாதிரியான பதங்களில் பல கருத்துகளைச் | AR5 SYR |

| Glossary Term | Definition | Source |
|---|---|---|
| | சூழலியல் இலக்கியம் உள்ளடக்கியுள்ளது. | |
| காலநிலை நிர்வாகம் | காலநிலை மாற்றத்தால் ஏற்படுகின்ற பாதிப்புகளை, ஆபத்துகளைத் தடுப்பது, தணிப்பது, அல்லது மாற்றியமைப்பதை நோக்கிய சமூக அமைப்புகளை வழிநடத்துவதை நோக்கமாகக் கொண்ட வழிமுறைகள் மற்றும் நடவடிக்கைகள் (Jagers and Stripple, 2003). | SR1.5 |
| காலநிலை நீதி | காலநிலை மாற்றத்தை நிவர்த்தி செய்வதற்கும் மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் காலநிலை மாற்றத்தின் சுமைகளையும் நன்மைகளையும் அதன் தாக்கங்களையும் சமமாகவும் நியாயமாகவும் பகிர்ந்து கொள்வதில், மனிதனை மையமாகக் கொண்ட அணுகுமுறையை அடைவதற்கு வளர்ச்சி மற்றும் மனித உரிமைகளை இணைக்கின்ற நீதி. மேரி ராபின்சன் அறக்கட்டளை பயன்படுத்திய விளக்கத்தின் அடிப்படையில் 'காலநிலை நீதி'க்கான இந்த வரையறை பயன்படுத்தப்படுகின்றது (MRFCJ, 2018). | SR1.5 |
| காலநிலை மாதிரி | இயற்பியல், வேதியியல், மற்றும் உயிரியல் பண்புகள், இவற்றின் தொடர்புகள் மற்றும் பின்னூட்டச் செயல்முறைகள் மற்றும் அதன் அறியப்பட்ட சில பண்புகளுக்கான கணக்கியல் ஆகியவற்றின் அடிப்படையிலான காலநிலை அமைப்பின் எண்ணியல் பிரதிநிதித்துவம். காலநிலை அமைப்பை பல்வேறு மாறுபட்ட சிக்கலான மாதிரிகளின் மூலம் குறிப்பிடலாம்; அதாவது, எந்தவொரு கூறு அல்லது கூறுகளின் கூட்டுக்கு ஓர் அலைமாலை அல்லது மாதிரிகளின் வரிசைமுறை மூலம் அடையாளம் காணப்படலாம். காலநிலை மாதிரிகள் காலநிலையைப் படிப்பதற்கும் உருவகப்படுத்துவதற்கும் மாதாந்திர, பருவகால மற்றும் பரஸ்பர காலநிலை கணிப்புகள் உள்ளிட்ட செயல்பாட்டு நோக்கங்களுக்காகவும் ஓர் ஆராய்ச்சிக் கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றன. | SR1.5 |
| காலநிலை நெகிழ்திறன் வளர்ச்சிப் பாதை | நிலையான வளர்ச்சியை வலுப்படுத்துகின்ற பாதைகள், வறுமையை ஒழிப்பதற்கான முயற்சிகள் மற்றும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல், அதேநேரத்தில் மாறிவருகின்ற காலநிலைக்கு நியாயமான மற்றும் குறுக்கு அளவிலான தகவமைப்பு மற்றும் நெகிழ்திறனை ஊக்குவிக்கும். புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த (உதாரணத்திற்கு, 1.5 டிகிரியிலேயே புவி தட்பவெப்பநிலையைத் தக்கவைத்தல்), கரிம வெளியீட்டைக் கடுமையாகக் குறைக்கவேண்டும். அதற்குரிய | |

| Glossary Term | Definition | Source |
|---|---|---|
| | மாற்றங்களைக் கொண்டுவர வல்ல, அனைவரும் விரும்பத்தக்க மற்றும் நல்வாழ்வு வாழக்கூடிய எதிர்காலங்களை அடைய, ஆழ்ந்த சமூக மாற்றத்திற்கான நெறிமுறைகள், சம பங்கு, மற்றும் சாத்தியக்கூறுகள் தேவைப்படுகின்றன. | |
| காலநிலை திட்டமிடல் | காலநிலை திட்டமிடல் என்பது, எதிர்கால உமிழ்வுகள் அல்லது பசுமை இல்ல வாயுக்கள் மற்றும் தூசுப்படலங்களின் செறிவு ஆகியவற்றைப் பொறுத்து தூண்டப்படுகின்ற எதிர்ச்செயல். இது பொதுவாகக் காலநிலை மாதிரிகளைப் பயன்படுத்திப் பெறப்படுகின்றது. உமிழ்வு/செறிவு/கதிர்வீச்சு-கட்டாய சூழ்நிலை ஆகியவற்றைப் பொறுத்து காலநிலை திட்டமிடல் காலநிலை கணிப்புகளிலிருந்து வேறுபடுகின்றது. இது காலநிலை தொடர்பான அனுமானங்களின் அடிப்படையில், உதாரணத்திற்கு, எதிர்காலச் சமூகப் பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களின் அடிப்படையில் அமைந்துள்ளது. | AR5 WG2 |
| காலநிலை சூழ்நிலை | உள்நாட்டின் சீரான காலநிலை உறவுகளின் அடிப்படையில் அமைந்துள்ள, எதிர்காலக் காலநிலையின் நம்பத்தகுந்த, பெரும்பாலும் எளிமைப்படுத்தப்பட்ட பிரதிநிதித்துவம், வெளிப்படையாக மானுடவியல் காரணங்களால் தூண்டப்பட்ட காலநிலை மாற்றத்தின் சாத்தியமான விளைவுகளை ஆராய்வதில் பயன்படுவதற்காகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. இவை பெரும்பாலும் தாக்கத்தைக் கணக்கிடும் மாதிரிகளுக்கான உள்ளீடாகச் செயல்படுகின்றது. காலநிலை கணிப்புகள் பெரும்பாலும் காலநிலை காட்சிகளை உருவாக்குவதற்கான மூலப்பொருளாகச் செயல்படுகின்றன. ஆனால், காலநிலை காட்சிகளுக்குப் பொதுவாகக் கவனிக்கப்பட்ட தற்போதைய காலநிலை போன்ற கூடுதல் தகவல்கள் தேவைப்படுகின்றன. | AR5 WG2 |
| காலநிலை சேவைகள் | காலநிலை சேவைகள் என்பது தனிநபர்கள் மற்றும் அமைப்புகள், முடிவெடுப்பதில் உதவுவதற்கும் ஆயத்தத்தையும் ஆரம்பக் காலநிலை மாற்ற நடவடிக்கைகளையும் செயல்படுத்துவதற்கும் காலநிலை மாற்றம் மற்றும்/அல்லது காலநிலை மாறுபாட்டின் தாக்கங்கள் குறித்த பயனர்களின் அறிவையும் புரிதலையும் மேம்படுத்தும் தகவல் மற்றும் தயாரிப்புகளைக் குறிக்கின்றது. அந்தத் தயாரிப்புகளில் காலநிலை தரவுத் தயாரிப்புகளும் அடங்கும். | SR1.5 |
| காலநிலை-இசைவு | காலநிலை-இசைவு வேளாண்மை என்பது | SR1.5 |

| Glossary Term | Definition | Source |
|---|---|---|
| வேளாண்மை | ஒரு வகையான அணுகுமுறை. இது விவசாய முறைகளை மாற்றுவதற்கும் மாற்றி அமைப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை வழிநடத்த உதவுகின்றது. இது வளர்ச்சியைத் திறம்பட ஆதரிக்கின்றது மற்றும் மாறிவரும் காலநிலையில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்கின்றது. இது மூன்று முக்கியக் குறிக்கோள்களைச் சமாளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது: விவசாய உற்பத்தித் திறன் மற்றும் வருமானத்தைத் தொடர்ந்து அதிகரித்தல், காலநிலை மாற்றத்திற்கு ஏற்றவாறு மாற்றியமைத்தல் மற்றும் கட்டமைத்தல், மற்றும் பசுமை இல்ல வாயு உமிழ்வை முடிந்தவரை குறைத்தல் மற்றும்/அல்லது நீக்குதல்(FAO, 2018). | |
| காலநிலை அமைப்பு | காலநிலை அமைப்பு என்பது ஐந்து முக்கியக் கூறுகளைக் கொண்ட மிகவும் சிக்கலான ஓர் அமைப்பு: வளிமண்டலம், நீர்க்கோளம், பனிப்படலம், பாறைக்கோளங்கள், உயிர்க்கோளம் மற்றும் அவற்றுக்கிடையேயான இடைவினைகள். எரிமலை வெடிப்புகள், சூரியக் கதிர் மாறுபாடுகள் போன்ற வெளிப்புற இயக்கவியல், மற்றும் மனிதத் தூண்டுதல்களால் மாறுபடுகின்ற வளிமண்டலம் மற்றும் நிலப் பயன்பாட்டில் இருக்கின்ற மாற்றங்கள் போன்றவற்றின் காரணமாக, காலநிலை அமைப்பு அதன் சொந்த உள் இயக்கவியலினுடைய செல்வாக்கின் கீழ், காலப்போக்கில் மாற்றமடைகின்றது. | *AR5 WG2* |
| காலநிலை இலக்கு | காலநிலை அமைப்பில் ஆபத்தான மானுவிடயல் குறுக்கீட்டைத் தவிர்க்கும் நோக்கத்துடன் பயன்படுத்தப்படுகின்ற வெப்பநிலை வரம்புதான் காலநிலை இலக்கு. இது செறிவு நிலை அல்லது உமிழ்வைக் குறைப்பதற்கான குறிக்கோளைக் குறிக்கின்றது. உதாரணத்திற்கு, தேசிய காலநிலை இலக்குகள் ஒரு குறிப்பிட்ட நேர எல்லைக்கு மேல் ஒரு குறிப்பிட்ட அளவு பசுமை இல்ல வாயு உமிழ்வைக் குறைப்பதை நோக்கமாகக் கொள்ளலாம், உதாரணத்திற்கு கியோட்டோ நெறிமுறையின் கீழ் உள்ளவை. | *SR1.5* |
| இணை-பயன்கள் | ஒட்டுமொத்த சமூக நலனில் நிகர விளைவைப் பொருட்படுத்தாமல், ஒரு குறிக்கோளை நோக்கமாகக் கொண்ட கொள்கை அல்லது நடவடிக்கை மற்ற நோக்கங்களில் ஏற்படக்கூடும். இணை-நன்மைகள் பெரும்பாலும் நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டவை மற்றும் உள்ளூர் சூழ்நிலைகள் மற்றும் செயல்படுத்தல் | *AR5 WG2* |

| Glossary Term | Definition | Source |
|---|---|---|
| | நடைமுறைகளைப் பொறுத்தது. இணை நன்மைகள், துணை நன்மைகள் என்றும் குறிப்பிடப்படுகின்றன. | |
| சமூகம் சார்ந்த தகவமைத்தல் | உள்ளூர், சமூகம் சார்ந்த தகவமைத்தல். சமூக அடிப்படையிலான தகவமைத்தல் சமூகங்களின் தகவமைப்புத் திறனை மேம்படுத்துவதிலும் ஊக்குவிப்பதிலும் கவனம் செலுத்துகின்றது. இது, சூழல், கலாச்சாரம், அறிவு, நிறுவனம் மற்றும் சமூகங்களின் விருப்பங்களை வலிமையாக எடுத்துக்கொள்ளும் ஓர் அணுகுமுறை. | AR5 WG2 |
| கலாச்சார தாக்கங்கள் | அடையாளம், சமூக ஒத்திசைவு, உடைமைகள், இடம் சார்ந்த உணர்வுகள், உலகக் கண்ணோட்டம், மதிப்புகள், உணர்வுகள் மற்றும் பாரம்பர்யம் போன்ற பரிமாணங்களை உள்ளடக்கிய கலாச்சாரத்தினுடைய பொருள் மற்றும் சூழலியல் அம்சங்களின் மீதான பாதிப்புகள், மற்றும் அதன் வாழ்வியல் அனுபவங்கள், ஆகியவற்றின் தாக்கங்கள். கலாச்சார தாக்கங்கள், சூழலியல் தாக்கங்களோடு நெருக்கமான தொடர்புகொண்டவை, குறிப்பாக உயிரினங்கள் மற்றும் நிலப்பரப்புகளின் பிரதிநிதித்துவப் பரிமாணங்களுக்கு. கலாச்சாரம் மற்றும் கலாச்சார நடைமுறைகள், மாற்றங்களின்போது இருக்கும் தாக்கத்தின் மதிப்பை, சாத்தியக்கூறு, தகவமைப்பு விருப்பங்களின் ஏற்புடைமை ஆகியவற்றை வடிவமைக்கின்றன. மேலும் தகவமைப்பு செயல்படுத்தும் திறன்களையும் நடைமுறைகளையும் வழங்குகின்றன. | AR5 WG2 |
| காலநிலை மாறுபாடு | தனிப்பட்ட வானிலை நிகழ்வுகளுக்கு அப்பாற்பட்ட அனைத்து இடஞ்சார்ந்த மற்றும் தற்காலிக அளவீடுகளில் காலநிலையின் சராசரி நிலை மற்றும் இதர புள்ளிவிவரங்களில் (நிலையான விலகல்கள், உச்சநிலை நிகழ்வுகள் போன்றவை) ஏற்படும் மாற்றங்களைக் குறிக்கின்றது காலநிலை மாறுபாடு. இதற்கு, காலநிலை அமைப்பினுள் (உள்ளார்ந்த மாறுபாடு) நடைபெறும் இயற்கையான உள் செயல்முறைகளில் நடக்கும் மாறுபாடுகள் காரணமாக இருக்கலாம் அல்லது இயற்கை அல்லது வெளிப்புற மனிதத் தலையீடுகளால் ஏற்படுகின்ற மாற்றங்கள் கூடக் காரணமாக இருக்கலாம். | SR1.5 |
| கட்சிகளின் மாநாடு | இது ஐக்கிய நாடுகள் அமைப்பினுடைய காலநிலை மாற்றத்திற்கான கட்டமைப்பின் மாநாடு போன்ற மாநாடுகளின் மிக உயர்ந்த அமைப்பு, | SR1.5 |

| Glossary Term | Definition | Source |
| --- | --- | --- |
| | மாநாட்டிற்கு ஒப்புதல் அளித்த அல்லது ஒப்புக்கொண்ட வாக்களிக்கும் உரிமையுடைய கட்சிகளை உள்ளடக்கியது. காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் கட்டமைப்பின் மாநாட்டையும் பார்க்கவும். | |
| பொதுவான ஆனால், வேறுபட்ட பொறுப்புகள் | பொதுவான ஆனால் வேறுபட்ட பொறுப்புகள் மற்றும் அது சம்பந்தப்பட்ட திறன்கள் என்பது ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றத்திற்கான கட்டமைப்பின் மாநாட்டில் ஒரு முக்கியக் கொள்கையாகும். இது காலநிலை மாற்றத்தைச் சமாளிப்பதில் தனிப்பட்ட நாடுகளின் வெவ்வேறு திறன்களையும் வேறுபட்ட பொறுப்புகளையும் அங்கீகரிக்கின்றது. அந்த மாநாடு, "அனைத்து நாடுகளும் அவர்களுடைய பொதுவான ஆனால் வேறுபட்ட பொறுப்புகள், அது சம்பந்தப்பட்ட திறன்கள் மற்றும் அவர்களுடைய சமூக, பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்ப ஒரு பயனுள்ள மற்றும் பொருத்தமான சர்வதேச மறுமொழியாக காலநிலை மாற்றத்தின் சர்வதேச தன்மையில் உலக நாடுகள் பரந்த ஒத்துழைப்போடு மாநாட்டில் பங்கேற்கவேண்டும்" என்று குறிப்பிடுகின்றது. பொதுவான ஆனால் வேறுபட்ட பொறுப்புகள் மற்றும் அது சம்பந்தப்பட்ட திறன்களுக்கான கொள்கை, அப்போதிருந்து, ஐ.நா காலநிலை பேச்சுவார்த்தைகளில் இது வழிகாட்டுகின்றது. | *SR1.5* |
| கரிம நீக்கச் செயல்முறை | எந்த நாடுகள் அல்லது நிறுவனங்கள், குறைந்த கரிமப் பொருளாதாரத்தை எட்டுவதை இலக்காகக் கொண்டு, அல்லது தனிநபர் கரிம நுகர்வைக் குறைப்பதை இலக்காகக் கொண்டு அதற்கு ஏற்ப மேற்கொள்ளும் செயல்முறை. | *SR1.5* |
| இணைப்புநீக்கல் | பொருளாதார வளர்ச்சி, புதைபடிம எரிபொருள்களின் நுகர்வோடு வலுவாக தொடர்புபடுத்தப்படாத இடமே இணைப்பு நீக்கல்(காலநிலை மாற்றம் தொடர்பாக). வெவ்வேறு விகிதங்களில் வளர்கின்றதே சார்பு இணைப்புநீக்கல். பொருளாதார விரிவாக்கம் நிகழும் இடத்தில் புதைபடிம எரிபொருள் குறைவதே அறுதி இணைப்பு நீக்கல். | *SR1.5* |
| காடழிப்பு | காட்டு நிலப்பகுதிகளை காடுகளற்ற நிலப்பகுதியாக மாற்றுவது. | *SR1.5* |
| பேரழிவு | பாதிக்கப்படக்கூடிய சமூக நிலைமைகளுடன் தொடர்பு கொள்ளும் அபாயகரமான இயற்பியல் நிகழ்வுகள் காரணமாக ஒரு சமூகம் அல்லது சமூகத்தின் இயல்பான செயல்பாட்டில் ஏற்படும் கடுமையான மாற்றங்கள், | *AR5 WG1* |

| Glossary Term | Definition | Source |
|---|---|---|
| | உடனடி அவசரகால மறுமொழி அல்லது இதிலிருந்து மீண்டு வருவதற்கான வெளிப்புற ஆதரவு தேவைப்படுகின்ற அளவுக்குப் பரவலான மனித, பொருளியல், பொருளாதார அல்லது சுற்றுச்சூழல் விளைவுகளுக்கு வழிவகுக்கும். | |
| பேரிடர் மேலாண்மை | பல்வேறு நிறுவன மற்றும் சமூக மட்டங்களில் பேரழிவுக்குத் தயார்படுத்துதல், எதிர்செயலாற்றுதல் மற்றும் மீட்பு நடைமுறைகளை ஊக்குவிக்கின்ற, மேம்படுத்துகின்ற உத்திகள், கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளை வடிவமைத்தல், செயல்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்கான சமூகச் செயல்முறைகள். | AR5 WG2 |
| பேரிடர் காப்பின்மை | பாதிக்கப்படக்கூடிய சமூக நிலைமைகளுடன் தொடர்புகொள்ளும் அபாயகரமான இயற்பியல் நிகழ்வுகள் காரணமாக ஒரு சமூகத்தின் அல்லது ஒரு சமூகத்தின் இயல்பான செயல்பாட்டில், ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் கடுமையான மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இது மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான முக்கியமான எதிர்செயலாற்றுதல் மற்றும் வெளிப்புற ஆதரவுடன்கூட மீட்பு முயற்சி தேவைப்படுகின்ற அளவுக்குப் பரவலான மனித, பொருளியல், பொருளாதார அல்லது சுற்றுச்சூழல் விளைவுகளுக்கு வழிவகுக்கின்றது. | SREX |
| பேரிடர் காப்பின்மை மேலாண்மை | உத்திகள், கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளை, வடிவமைத்தல், அமல்படுத்துதல் மற்றும் மதிப்பிடுதலுக்கான செயல்முறைகள் மூலம், பேரிடர் அபாயங்களை, பேரிடர் அபாயத்தைக் குறைப்பதற்கான முயற்சிகளை, பேரிடருக்குத் தயார்படுத்துவதை மேம்படுத்திக்கொள்வதை ஊக்குவிப்பதை, எதிர்செயலாற்றுதலை, மனிதப் பாதுகாப்பு, நல்வாழ்வு, வாழ்க்கைத்தரம் மற்றும் நீடித்த நிலையான வளர்ச்சியை அதிகரிக்கும் நோக்கத்தைக் கொண்ட செயல்முறைகள். | SREX |
| பேரிடர் அபாயத்தைக் குறைத்தல் | இது, கொள்கை இலக்கு அல்லது குறிக்கோள் இரண்டையும் குறிக்கின்றது மற்றும் எதிர்கால பேரழிவு அபாயத்தை எதிர்நோக்கும் உத்தி மற்றும் அதற்கு ஏதுவான நடவடிக்கைகள்; ஏற்கெனவே உள்ள வெளிப்பாடு, ஆபத்து அல்லது பாதிப்பைக் குறைத்தல் மற்றும் பின்னடைவை மேம்படுபடுத்துதல். | SREX |
| வறட்சி | நீண்ட காலகட்டத்திற்குத் தொடரும் அசாதரணமான வறண்ட வானிலை, ஒரு தீவிர நீரியல் ஏற்றத்தாழ்வை ஏற்படுத்தும். வறட்சி என்பது ஓர் ஒப்புமைச் சொல்; | AR5 SYR |

| Glossary Term | Definition | Source |
|---|---|---|
| | ஆகவே, மழைப்பொழிவில் நிகழும் பற்றாக்குறையைப் பொறுத்தவரை, குறிப்பிட்ட மழைப்பொழிவு தொடர்பான செயல்பாட்டை இது குறிக்கவேண்டும். உதாரணத்திற்கு, வளரும் பருவத்தில் மழைப்பொழிவு பற்றாக்குறை பொதுவாகப் பயிர் உற்பத்தி அல்லது சூழலியல் செயல்பாட்டைப் பாதிக்கின்றது (மண்ணின் ஈரப்பதம், வறட்சி காரணமாக, விவசாய வறட்சி என்றும் அழைக்கப்படுகின்றது). மேலும் நீர் வழிந்தோடுதல் மற்றும் ஊடுருவல் பருவம், முதன்மையாக நீர் விநியோகத்தைப் (நீரியல் வறட்சி) பாதிக்கின்றது. உள்ளபடியிலான இலை நீராவிப்போக்கு அதிகரிப்பதால், மண்ணின் ஈரப்பதம் மற்றும் நிலத்தடி நீரின் சேமிப்பில் நடைபெறுகின்ற மாற்றங்கள், மழைப்பொழிவைக் குறைக்கின்றது. வழக்கத்திற்கு மாறான மழைப்பொழிவு பற்றாக்குறை உள்ள காலகட்டம் வானிலை வறட்சி என்று வரையறுக்கப்படுகின்றது. ஒரு பெரும் வறட்சி என்பது மிக நீண்ட மற்றும் பரவலான வறட்சி. இது இயல்பைவிட நீண்டகாலத்திற்கு, அதாவது சில பத்தாண்டுகளுக்குக்கூட நீடிக்கும். | |
| ஊடறு புதுமையாக்கம் | ஊடறு புதுமையாக்கம் என்பது தேவை அடிப்படையிலான தொழில்நுட்ப மாற்றமாகும். இது குறிப்பிடத்தக்க கணினி மாற்றத்திற்கு வழிவகுக்கின்றது மற்றும் வலுவான அதிவேக வளர்ச்சியால் வகைப்படுத்தப்படுகின்றது. | *SR1.5* |
| ஆரம்பக்கட்ட எச்சரிக்கை அமைப்பு | தனிநபர்கள், சமூகங்கள் மற்றும் அமைப்புகளுக்கு ஏற்படக்கூடிய தீங்கு குறித்து அல்லது இழப்பு ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புகளைக் குறைக்க, சரியான முறையில் செயல்படத் தயாராவதற்குச் சரியான நேரத்தில், அர்த்தமுள்ள எச்சரிக்கைகளை உருவாக்க மற்றும் பரப்புவதற்குத் தேவைப்படுகின்ற தொழில்நுட்ப, நிதி மற்றும் நிறுவனத் திறன்களின் தொகுப்பு. சூழலைப் பொறுத்து, ஆரம்பக்கட்ட எச்சரிக்கை அமைப்பு, அதற்குரிய அறிவியல் மற்றும் இடம்சார்ந்த தகவல்களைப் பெறலாம். சூழலியல் பயன்பாடுகளுக்காகவும் இது கருத்தில் கொள்ளப்படுகிறது. உதாரணத்திற்கு, சுற்றுச்சூழல் பாதுகாப்பில், ஓர் அமைப்பு அபாயத்தால் அச்சுறுத்தப்படவில்லை, எனினும் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் கீழுள்ள சூழலியல் அமைப்பு (ஓர் உதாரணத்திற்கு பவளப்பாறை நிறமாற்றம் குறித்த எச்சரிக்கைகள்), விவசாயத்தில் (உதாரணத்திற்கு, நில பனி, ஆலங்கட்டி | *SR1.5* |

| Glossary Term | Definition | Source |
|---|---|---|
| | மழை குறித்த எச்சரிக்கைகள்) மற்றும் மீன்வளம் (புயல் மற்றும் சுனாமி குறித்த எச்சரிக்கைகள்). இந்த சொற்பொருள்கள், ஐக்கிய நாடுகள் அமைப்பினுடைய பேரிடர் குறைப்பிற்கான உத்தி (UNISDR, 2009) மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச குழு (IPCC,2012a) ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் வரையறைகளிலிருந்து உருவாகின்றது. | |
| சூழலியல் அமைப்பு | உயிரினங்கள், அவை வாழ்கின்ற சூழல் மற்றும் அந்தச் சூழலுக்கு உள்ளும் அவற்றுக்கு இடையேயுமான இடைவினைகள் ஆகியவற்றைக் கொண்ட ஒரு செயல்பாட்டு அமைப்பே சூழலியல் அமைப்பு. ஒரு சூழலியல் அமைப்பிலுள்ள கூறுகள் மற்றும் அதன் இடஞ்சார்ந்த எல்லைகள், அந்த அமைப்பில் வரையறுக்கப்பட்டுள்ள நோக்கங்களைப் பொறுத்தது. அந்த இடஞ்சார்ந்த சூழலியல் எல்லைகள் காலப்போக்கில் மாறக்கூடும். சூழலியல் அமைப்புகள் மற்ற சூழலியல் அமைப்புகளோடு தொடர்புகொண்டிருக்கின்றன. அவற்றுடைய அளவு, சிறியது முதல் பெரியளவிலான உயிர்க்கோளம் வரை இருக்கலாம். தற்போதைய காலகட்டத்தில், பெரும்பாலான சூழலியல் அமைப்புகள் மனிதர்களை முக்கிய உயிரினமாகக் கொண்டிருக்கின்றன, அல்லது குறிப்பிட்ட சூழலியல் அமைப்பு மனித நடவடிக்கைகளால் ஏற்படுகின்ற விளைவுகளால் பாதிக்கப்படுகின்றன. | *AR5 WG1* |
| சூழலியல் அமைப்பு சார்ந்த தகவமைப்பு | காலநிலை மாற்றத்தின் ஆபத்தான விளைவுகளுக்கு ஏற்ப மக்களை மாற்றியமைக்க உதவும் ஒட்டுமொத்த தகவமைப்பு உத்தியின் ஒரு பகுதியாக பல்லுயிர் மற்றும் சூழலியல் அமைப்புச் சேவைகளைப் பயன்படுத்துதல். சூழலியல் அமைப்பு சார்ந்த தகவமைப்பு, காலநிலை மாற்றத்தின் தாக்கங்களுக்கு ஏற்ப மக்களை மாற்றியமைக்கின்ற சேவைகளை வழங்க, நிலையான மேலாண்மை, பாதுகாப்பு மற்றும் சூழலியல் அமைப்புகளை மீட்டெடுப்பதற்கான வாய்ப்புகளின் வரம்பைப் பயன்படுத்துகின்றது. காலநிலை மாற்றத்தின் விளைவுகளை எதிர்கொள்வதில் சூழலியல் அமைப்புகள் மற்றும் மக்களின் பாதிப்புகளைக் குறைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. சுற்றுச்சூழல் அடிப்படையிலான தகவமைப்பு மிகவும் பொருத்தமான மேம்பாடு மற்றும் தகவமைப்பிற்கான உத்திகளில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது (CBD, 2009). | *AR5 WG2* |

| Glossary Term | Definition | Source |
| --- | --- | --- |
| **சூழலியல் சேவைகள்** | தனிநபர்களுக்கோ அல்லது சமூகத்திற்கோ பணம் அல்லது பணமற்ற மதிப்பைக் கொண்ட சூழலியல் செயல்முறைகள் அல்லது செயல்பாடுகள். இவை அடிக்கடி கீழ்கண்ட விதங்களில் வகைப்படுத்தப்படுகின்றன. (1) உற்பத்தித்திறன் அல்லது பல்லுயிரிய பராமரிப்பு போன்ற துணை சேவைகள், (2) உணவு, நார், அல்லது மீன் போன்ற வழங்கல் சேவைகள், (3) காலநிலை கட்டுப்பாடு அல்லது கரிமத் தன்மயமாக்கல் போன்ற சேவைகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் (4) காலச்சார சேவைகளான சுற்றுலா அல்லது ஆன்மிகம் மற்றும் அழகியல். | *AR5 WG2* |
| **எல் நினோ தெற்கு அலைவு** | எல் நினோ என்ற சொல் ஆரம்பத்தில் ஈக்வடார் மற்றும் பெருவின் கரையோரத்தில் அவ்வப்போது பாயும், உள்ளூர் மீன் வளத்தைச் சீர்குலைத்த ஒரு சூடான நீரோட்டத்தை விவரிக்கப் பயன்படுத்தப்பட்டது. காலக்கோட்டிற்குக் கிழக்கே வெப்பமண்டல பசிபிக் பெருங்கடலின் ஒரு பரந்த அளவிலான வெப்பமயமாதலுடன் இது அடையாளம் காணப்படுகின்றது. இந்தப் பெருங்கடல் நிகழ்வு தெற்கு அலைவு எனப்படும் உலக அளவிலான வெப்பமண்டல மற்றும் துணை வெப்பமண்டல மேற்பரப்பு அழுத்த வடிவத்தின் ஏற்ற இறக்கத்துடன் தொடர்புடையது. இந்த இணைந்த வளிமண்டலம்-கடல் நிகழ்வு, இரண்டு முதல் ஏழு ஆண்டுகள் வரையிலான கால அளவீடுகளுடன், எல் நினோ-தெற்கு அலைவு என அழைக்கப்படுகின்றது. இது பெரும்பாலும் டஹிடி மற்றும் டார்வினுக்கு இடையேயான மேற்பரப்பு அழுத்த முரண்பாடு அல்லது மத்திய மற்றும் கிழக்கு பூமத்திய ரேகை பசிபிக் கடல் மேற்பரப்பு வெப்பநிலையால் அளவிடப்படுகின்றது. ஒரு எல் நினோ தெற்கு அலைவு நிகழ்வின் போது, நிலவும் தடக்காற்றுகள் பலவீனமடைகின்றன, கடல் மேற்பரப்புடைய வெப்பநிலை அதிகரிக்கும்போது, தடக்காற்று மேலும் பலவீனபடுகின்றது. இந்த நிகழ்வு வெப்பமண்டல பசிபிக் பகுதியில் காற்று, கடல் மேற்பரப்பு வெப்பநிலை மற்றும் மழைப்பொழிவு முறைகள் ஆகியவற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. உலகளாவிய தொலைத்தொடர்பு வழியாக, பசிபிக் பகுதி மற்றும் பூமியின் இதர பகுதிகளிலும் இது காலநிலை விளைவுகளை ஏற்படுத்துகின்றது. எல் நினோ தெற்கு அலைவின் குளிர் நீரோட்டம் லா நினா என்றழைக்கப்படுகின்றது. | *AR5 SYR* |

| Glossary Term | Definition | Source |
|---|---|---|
| உருவாகக்கூடிய மறையிடர்கள் | ஒரு சிக்கலான அமைப்பில் ஏற்படும் நிகழ்வுகளின் தொடர்புகளிலிருந்து எழுகின்ற ஆபத்து. உதாரணத்திற்கு, காலநிலை மாற்றத்திற்கு எதிர்செயலாற்றும் விதமாக, மக்கள் தொகை புவியியல் மாற்றங்களுக்கு வித்திடும்போது ஏற்படுகின்ற ஆபத்து, எளிதில் பாதிக்கப்படும் தன்மையையும் அதனால் பாதிக்கப்படப் போகும் மக்களை அதன் வெளிப்பாட்டிற்கும் வழிவகுக்கின்றது. | *AR5 WG2* |
| உமிழ்வு நிலவரம் | உந்து சக்திகள் (மக்கள்தொகை மற்றும் சமூகப் பொருளாதார மேம்பாடு, தொழில்நுட்ப மாற்றம் போன்றவை) மற்றும் அவற்றின் ஒத்திசைவான மற்றும் உள்நாட்டில் உந்து சக்திகள் (மக்கள்தொகை மற்றும் சமூக பொருளாதார மேம்பாடு, தொழில்நுட்ப மாற்றம் போன்றவை) மற்றும் அவற்றின் ஒத்திசைவான மற்றும் உள்நாட்டில் நிலையான ஊகங்களின் அடிப்படையில் கதிரியக்கமாக செயல்படக்கூடிய பொருட்களின் எதிர்கால வளர்ச்சியின் நம்பத்தகுந்த பிரதிநிதித்துவம். உந்து சக்திகள் (மக்கள்தொகை மற்றும் சமூக பொருளாதார மேம்பாடு, தொழில்நுட்ப மாற்றம் போன்றவை) மற்றும் அவற்றோடு தொடர்புடையவை குறித்த ஒருங்கிய மற்றும் உள்நாட்டு நிலையான ஊகங்களின் அடிப்படையில் கதிரியக்கமாகச் செயல்படக்கூடிய (உதாரணத்திற்கு, பசுமை இல்ல வாயுக்கள், தூசுப்படலங்கள்) போன்றவற்றின் எதிர்கால வளர்ச்சிக்குரிய நம்பத்தகுந்த பிரதிநிதித்துவம். கரிம உமிழ்வு மூலமாகப் பெறப்படுகின்ற செறிவுக் காட்சிகள், காலநிலை கணிப்புகளைக் கணக்கிடுவதற்கு ஒரு காலநிலை மாதிரியின் உள்ளீடாகப் பயன்படுத்தப்படுகின்றன. | *AR5 WG2* |
| உமிழ்வு வர்த்தகம் | உமிழ்வைத் தணிக்கும் நோக்கத்தைத் திறமையான முறையில் பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்ட சந்தை அடிப்படையிலான கருவி. வர்த்தக திட்டத்தின் அதிகார எல்லைக்குள் உள்ள நிறுவனங்களுக்கு ஏலமிடுதல் மற்றும் இலவச கொடுப்பனவுகளை வழங்குவதன் மூலம் ஒதுக்கப்படும் வர்த்தக உமிழ்வு அனுமதிகளுக்கு நிகராக பசுமை இல்ல வாயு உமிழ்வு பிரிக்கப்பட்டுள்ளது. நிறுவனங்கள் அவற்றுடைய உமிழ்வுகளின் அளவுக்கு நிகரான உமிழ்வு அனுமதிகளை ஒப்படைக்கவேண்டும் (உதாரணத்திற்கு டன் கணக்கில் கரிம | *SR1.5* |

| Glossary Term | Definition | Source |
|---|---|---|
| | வாயு அளவு). ஒரு நிறுவனம் அதிகளவு உமிழ்வு அனுமதிகளை, மிகவும் மலிவான வழியில் அதே அளவு உமிழ்வுகளைத் தவிர்க்கக்கூடிய நிறுவனங்களுக்கு விற்கலாம். உள்-நிறுவனம், உள்நாட்டு, அல்லது சர்வதேச மட்டத்தில் வர்த்தகத் திட்டங்கள் நிகழலாம் (உதாரணத்திற்கு, கியோட்டோ நெறிமுறை மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உமிழ்வு வர்த்தக அமைப்பின் கீழுள்ள நெகிழ்வு வழிமுறைகள்) மற்றும் கரிம வாயு, இதர பசுமை இல்ல வாயுக்கள் அல்லது இதர பொருள்களுக்கு இது பொருந்தும். | |
| நிபந்தைகளை இயக்குதல் | தகவமைப்பு மற்றும் மட்டுப்படுத்துதலின் சாத்தியக்கூறுகளைப் பாதிக்கும் நிபந்தனைகள், மற்றும் தட்பவெப்பநிலை அதிகரிப்பதை 1.5 டிகிரி செல்ஷியஸாக கட்டுப்படுத்தும் மற்றும் அதனுடன் தொடர்புடைய காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப அமைப்புகள் மற்றும் சமூகங்களின் திறன்களை மேம்படுத்துகின்ற முறையான மாற்றங்களைத் துரிதப்படுத்தவும் அளவிடவும் முடியும். அதேநேரத்தில் நீடித்த நிலையான வளர்ச்சியை அடைந்து, வறுமையை ஒழித்து, ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கவும் முடியும். | *SR1.5* |
| ஆற்றல் அணுகல் | சமையல், சூடாக்குதல், விளக்குகள், தகவல் தொடர்புகள் மற்றும் உற்பத்திப் பயன்பாடுகள் போன்றவற்றுக்குத் தேவைப்படுகின்ற தூய்மையான, நம்பகமான, மற்றும் எளிதில் கிடைக்கக்கூடிய ஆற்றல் அணுகக்கூடிய விதத்தில் இருத்தல் | *AR5 SYR* |
| ஆற்றல் பாதுகாப்பு | ஒரு நாட்டின் அல்லது ஒட்டுமொத்த உலகளாவிய சமூகம், நிலையான, போதுமான, மற்றும் கணிக்கக்கூடிய எரிசக்தி விநியோகத்தைப் பராமரிக்க வேண்டுமென்ற இலக்கு. தேசிய எரிசக்தித் தேவையை சந்தைப் போட்டிக்கு ஏற்ப மற்றும் நிலையான விலையில் பூர்த்தி செய்ய ஏதுவாக, எரிசக்தி வளங்களின் அளவு மற்றும் எரிசக்தி விநியோகத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள்; தொழில்நுட்பங்களின் மேம்பாடு மற்றும் வரிசைப்படுத்துதல்; எரிசக்தி விநியோகங்களை உருவாக்குவதற்கும் சேமிப்பதற்கும் கடத்துவதற்கும் போதுமான உள்கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் வழங்குவதற்கான ஒப்பந்தங்களை உறுதி செய்தல். | *AR5 SYR* |
| சமத்துவம் | தோற்றத்தைப் பொருட்படுத்தாமல், சம வாய்ப்புகள், உரிமைகள் மற்றும் கடமைகள் உட்பட அனைத்து மனிதர்களுக்கும் சமமான மதிப்பைப் பரிந்துரைக்கின்ற கொள்கை. வருமான | *SR1.5* |

| Glossary Term | Definition | Source |
|---|---|---|
| | சமத்துவமின்மை என்பது ஒரு நாட்டினுள் மற்றும் நாடுகளுக்கு இடையிலும் அதிக மற்றும் குறைந்த வருமானம் ஈட்டுபவர்களுக்கு இடையிலான இடைவெளிகளைக் குறிக்கின்றது. பங்கு, நெறிமுறைகள் மற்றும் நேர்மை ஆகியற்றையும் காண்க. | |
| சமபங்கு | சமபங்கு என்பது சுமையைப் பகிர்வதில் இருக்கின்ற நியாயத்திற்கான கொள்கை. மேலும் செலவுகள் மற்றும் நன்மைகள் உட்பட காலநிலை மாற்றத்திற்கான தாக்கங்கள் மற்றும் மறுமொழிகள் எவ்வாறு சமுதாயத்தில் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ சமமான வழிகளில் விநியோகிக்கப்படுகின்றன என்பதைப் புரிந்துகொள்வதற்கான ஓர் அடிப்படை. இது பெரும்பாலும் சமத்துவம், நேர்மை மற்றும் நீதி குறித்த கருத்துகளுடன் ஒத்துப் போகின்றது மற்றும் சமூகம், தலைமுறைகள் மற்றும் பாலினம் முழுவதிலும் உள்ள காலநிலை தாக்கங்கள் மற்றும் கொள்கைகளின் பொறுப்பு மற்றும் விநியோகம் ஆகியவற்றில் சமத்துவத்தைப் பொறுத்துப் பயன்படுத்தப்படுகின்றது. மேலும் யார் முடிவெடுக்கும் செயல்முறைகளில் பங்கேற்கிறார்கள் மற்றும் கட்டுப்படுத்துகிறார்கள் என்பதைப் பொருத்தது.<br>பரவலான சமபங்கு: செயல்கள் அல்லது கொள்கைகளின் விளைவுகள், செலவுகள் மற்றும் நன்மைகளில் சமத்துவம். வெவ்வேறு மக்கள், இடங்கள் மற்றும் நாடுகளுக்குரிய காலநிலை மாற்றம் அல்லது காலநிலை கொள்கைகளைப் பொறுத்தவரை, தகவமைப்பு மற்றும் மட்டுப்படுத்துவதில் கிடைக்கும் சமபங்கு அம்சங்கள் மற்றும் நன்மைகள் உட்பட.<br>பாலின சமத்துவம்: பெண்களுக்கும் ஆண்களுக்கும் ஒரே உரிமைகள், வளங்கள் மற்றும் வாய்ப்புகள் உள்ளன என்பதை உறுதிப்படுத்துதள். காலநிலை மாற்றத்தைப் பொறுத்தவரை, பெண்கள் பெரும்பாலும் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களுக்கு மிக அதிகமாகப் பாதிக்கப்படுகின்றனர் என்பதையும் காலநிலை கொள்கையின் செயல்முறை மற்றும் விளைவுகளில் பின்தங்கியிருக்கக்கூடும் என்பதையும் பாலின சமத்துவம் அங்கீகரிக்கின்றது.<br>தலைமுறைகளுக்கு இடையிலான சமபங்கு: கடந்த கால மற்றும் தற்போதைய உமிழ்வுகள், பாதிப்புகள் மற்றும் கொள்கைகளின் விளைவுகள் எதிர்காலத்தில் மற்றும் வெவ்வேறு | *SR1.5* |

| Glossary Term | Definition | Source |
| --- | --- | --- |
| | வயதினருக்கான மக்களுக்குச் செலவுகள் மற்றும் நன்மைகளை விதிக்கின்றன என்பதை ஒப்புக்கொள்ளும் தலைமுறைகளுக்கு இடையிலான சமத்துவம். | |
| வெளிப்படுதல் | மக்கள், வாழ்வாதாரம், உயிரினங்கள் அல்லது சூழலியல் அமைப்புகள், சுற்றுச்சூழல் செயல்பாடுகள், சேவைகள் மற்றும் வளங்கள், கட்டுமானங்கள், அல்லது பொருளாதார, சமூக, கலாச்சார உடைமைகள் மற்றும் கட்டமைப்புகளில் மோசமாகப் பாதிக்கப்படக்கூடிய அளவுக்கு வெளிப்பட்டிருக்கும் இடங்கள். | AR5 WG2 |
| அறுதிநிலைகள்/வெளிப்புறச் செலவுகள்/வெளிப்புற பயன்கள் | சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகும் முகவர்கள் மற்றவர்களுடைய உற்பத்தி மற்றும் நுகர்வுச் சாத்தியங்கள் மீதான நடவடிக்கைகளின் தாக்கங்களை முழுமையாகக் கணக்கில் எடுத்துக்கொள்ளாதபோது, மனித நடவடிக்கைகளின் வழியே அறுதிநிலைகள் எழுகின்றன. மேலும் இதுபோன்ற பாதிப்புகளுக்கு இழப்பீடு என்றும் எதுவுமில்லை. தாக்கங்கள் எதிர்மறையாக இருக்கும்போது, அவை வெளிப்புறச் செலவுகளாக அமைகின்றன. அதுவே தாக்கங்கள் நேர்மறையாக இருக்கையில், வெளிப்புறப் பயன்களாக இருக்கின்றன. | AR5 WG2 |
| தீவிர வானிலை நிகழ்வு | ஒரு தீவிர வானிலை நிகழ்வு என்பது, ஒரு குறிப்பிட்ட இடத்திலும் ஆண்டின் ஒரு குறிப்பிட்ட நேரத்திலும் நிகழும் ஓர் அரிதான நிகழ்வு. இதில் அரிதான என்பதற்குரிய வரையறைகள் வேறுபடுகின்றன. ஆனால், ஒரு தீவிர வானிலை நிகழ்வு வழக்கமான கணிப்புகளிலிருந்து மதிப்பிடப்பட்ட சாத்தியக்கூறுகள், 10 அல்லது 90 சதவிகிதத்தைவிட அதாவது அரிதான அல்லது அரிதிலும் அரிதானதாக இருக்கும். பொருள் வரையறையின்படி, தீவிர வானிலை என அழைக்கப்படுவனவற்றின் பண்புகள் ஒரு முழுமையான அர்த்தத்தில் இடத்திற்கு இடம் மாறுபடும். தீவிர வானிலை போன்ற ஒருவித வடிவம் தொடர்ந்து நீடித்தால், அது தீவிர காலநிலை நிகழ்வாக வகைப்படுத்தப்படலாம், குறிப்பாக இதுவொரு சராசரி அல்லது மொத்தத்தையும் தானே விளைவிக்கும் (உதாரணத்திற்கு, ஒரு பருவம் முழுக்க நீடிக்கும் வறட்சி அல்லது அதீத மழை). | AR5 WG2 |
| வெள்ளம் | ஒரு நீரோடை அல்லது பிற நீர்நிலைகளின் இயல்பான வரம்புகள் நிரம்பி வழிவது அல்லது பொதுவாக நீரில் மூழ்காத பகுதிகளில் நீர் குவிதல். ஆற்று வெள்ளம், | AR5 SYR |

| Glossary Term | Definition | Source |
|---|---|---|
| | காட்டாற்று வெள்ளம், நகர்ப்புற வெள்ளம், மழைசார் வெள்ளம், கழிவுநீர் வெள்ளம், கடலோர வெள்ளம் மற்றும் பனிப்பாறை ஏரி வெடித்து உருவாகும் வெள்ளம் ஆகியவை வெள்ளம் என்ற வரையறையில் அடங்கும். | |
| உணவுப் பாதுகாப்பு | சாதாரண வளர்ச்சி,மேம்பாடு மற்றும் சுறுசுறுப்பான, ஆரோக்கியமான வாழ்க்கைக்குப் போதுமான அளவு பாதுகாப்பான மற்றும் ஊட்டச்சத்து நிறைந்த உணவு மக்களுக்குக் கிடைப்பதை உறுதி செய்தல். | AR5 SYR |
| புதைபடிம எரிபொருள் உமிழ்வுகள் | பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வு (குறிப்பாக கரிம வாயு), எண்ணெய், எரிவாயு மற்றும் நிலக்கரி போன்ற புதைபடிம கரிம இருப்புகளிலிருந்து எரிபொருள்களை எரிப்பதன் விளைவாக பிற வாயுக்களின் சுவடு மற்றும் தூசுப்படலங்கள். | AR5 WG1 |
| எரிபொருள் வறுமை | ஒரு குடும்பத்தால், வீட்டிற்குத் தேவைப்படுகின்ற ஆற்றல் சேவைகளுக்கு (குறிப்பாக சூடாக்குதல்), ஒரு குறிப்பிட்ட அளவிலான நுகர்வுக்கு உத்தரவாதம் அளிக்கமுடியாத நிலை அல்லது இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஏற்ற அளவிலான செலவுச் சுமைகளைச் சந்திக்கும் ஒரு சூழ்நிலை. | AR5 SYR |
| இயலுமை | எந்த அளவிற்கு காலநிலை இலக்குகள் மற்றும் மறுமொழித் தேர்வுகள் போன்றவை சாத்தியம் அல்லது விரும்பத்தக்கது என்ற அளவு. புவி இயற்பியல், சூழலியல், தொழில்நுட்பம், பொருளாதார, சமூக, மற்றும் நிறுவன நிலைமைகளில் ஏற்படுகின்ற மாற்றங்களைப் பொறுத்து இயலுமை இருக்கும். இயலுமையின் அடிப்படையாக, இயக்க ஆற்றல் சார்ந்து, இடம் சார்ந்து மற்றும் பல்வேறு குழுக்களுக்கு இடையே நிகழ்வும் மாற்றங்கள் இருக்கலாம். இயக்குகின்ற சூழ்நிலையையும் பார்க்கவும். | SR1.5 |
| புவிசார் பொறியியல் | புவிசார் பொறியியல் என்பது காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைத் தணிப்பதற்காக, காலநிலை முறையை வேண்டுமென்றே மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட ஒரு பரந்த செயல்முறைகள் மற்றும் தொழில்நுட்பங்களைக் குறிக்கின்றது. இதில் பெரும்பாலானவை, ஆனால் அனைத்துமே அல்ல. (1) காலநிலை அமைப்பில் உறிஞ்சப்பட்ட சூரிய சக்தியின் அளவைக் குறைக்க (சூரிய கதிர்வீச்சு மேலாண்மை) அல்லது (2) வளிமண்டலத்திலிருந்து நிகர கரிம மூழ்கி வளிமண்டலத்தை மாற்றுவதற்குரிய | AR5 WG1 |

| Glossary Term | Definition | Source |
| --- | --- | --- |
| | போதுமான அளவுக்கு அதிகரிக்கின்றது (கரிம வாயுவை அகற்றுதல்). அளவுகோலும் நோக்கமும் தான் மைய முக்கியத்துவம் வாய்ந்தவை. புவிசார் பொறியியல் முறைகளில் சம்பந்தப்பட்ட இரண்டு முக்கியப் பண்புகள், காலநிலை அமைப்பு (உதாரணத்திற்கு, வளிமண்டலம், நிலம் அல்லது பெருங்கடல்) முறையை உலகளவில் அல்லது பிராந்திய ரீதியாகப் பயன்படுத்துகின்றன அல்லது பாதிக்கின்றன. மேலும் தேசிய எல்லைகளைக் கடக்கும் கணிசமான திட்டமிடப்படாத விளைவுகளை இது ஏற்படுத்தக்கூடும். | |
| புவி வெப்பமயமாதல் | உலகளாவிய சராசரி மேற்பரப்பு வெப்பநிலையில் மதிப்பிடப்பட்ட அதிகரிப்பு, 30 ஆண்டுக் காலப்பகுதியில் சராசரியாக இருந்தது, அல்லது ஒரு குறிப்பிட்ட ஆண்டு அல்லது பத்தாண்டு காலகட்டத்தை மையமாகக் கொண்ட 30 ஆண்டுக் காலம், தொழில்புரட்சிக்கு முந்தைய நிலைகளுடன் இது ஒப்பிடப்பட்டு குறிப்பிடப்படுகின்றது. கடந்த ஆண்டுகள் மற்றும் எதிர்கால ஆண்டுகளை உள்ளடக்கிய 30 ஆண்டு காலகட்டத்திற்கு, தற்போதைய பல பத்தாண்டுகளுக்கு இந்த வெப்பமயமாதல் போக்கு தொடருமென்று கருதப்படுகின்றது. | *SR1.5* |
| நிர்வாகம் | தேசிய அரசு சார்ந்த அரசாங்கமாக வரையறுக்கப்பட்ட அரசாங்கத்திலிருந்து அதைவிட அதிகமாக உள்ளடக்கிய நிர்வாக முறைக்கு தொடர்புடைய மாற்றம். இது அரசாங்கத்தினுடைய பல்வேறு நிலைகளின் (உலகளாவிய, சர்வதேச, பிராந்திய, உள்ளூர்) பங்களிப்புகளையும் தனியார் துறையின் பங்குகளையும் அரசு சாரா அமைப்புகளின், குடிமைச் சமூகங்களின் பங்களிப்புகளையும் அங்கீகரிக்கின்றது. | *SREX* |
| பசுமை இல்ல வாயுக்கள் | செயற்கையாகவும் மானுடவியல் காரணங்களாலும், வளிமண்டலத்தில் இருக்கின்ற வாயுத் தொகுப்பே பசுமை இல்ல வாயுக்கள். பூமியின் மேற்பரப்பு, வளிமண்டலம் மற்றும் மேகங்களில் வெளிப்படும் கதிர்வீச்சின் அலைமாலையில் இருக்கின்ற குறிப்பிட்ட அலைநீளங்களைக் கொண்ட கதிர்வீச்சுகளை இவை கிரகித்து, வெளியேற்றுகின்றன. இவை பசுமை இல்ல விளைவுகளுக்கு வழிவகுக்கின்றன. நீராவி ($H_2O$), கரிம வாயு ($CO_2$), நைட்ரஸ் ஆக்சைடு ($N_2O$), மீத்தேன் ($CH_4$), மற்றும் ஓசோன் ($O_3$) ஆகியவை பூமியின் வளிமண்டலத்திலுள்ள முதன்மை பசுமை இல்ல வாயுக்கள். | *SR1.5* |

| Glossary Term | Definition | Source |
|---|---|---|
| | மேலும் வளிமண்டலத்தில் முற்றிலும் மனிதர்களால் உருவாக்கப்பட்ட பசுமை இல்ல வாயுக்கள் உள்ளன, அதாவது உப்பீனி கரிமசேர்மம், பிற பாசிகம் (குளோரின்) மற்றும் புரோமின் கொண்ட பொருள்கள், மான்ட்ரியல் நெறிமுறைகளின்கீழ் கையாளப்படுகின்றன. | |
| தீங்கு | உயிரிழப்பு, காயம் அல்லது பிற உடல்நல பாதிப்புகள், அத்துடன் பொருள், உள்கட்டமைப்பு, வாழ்வாதாரங்கள், சேவை வழங்கல் மற்றும் சுற்றுச்சூழல் வளங்களுக்குச் சேதம் மற்றும் இழப்பை ஏற்படுத்தக்கூடிய இயற்கையான அல்லது மனிதர்களால் தூண்டப்பட்ட இயற்பியல் நிகழ்வு. | SREX |
| அனற்காற்று | அசாதாரணமான மற்றும் சங்கடமான அளவுக்கு வெப்பம் மிகுந்த வானிலை. | AR5 SYR |
| மனிதப் பாதுகாப்பு | மனித வாழ்வியலின் முக்கியமான மையம் பாதுகாக்கப்படுதல் மற்றும், மக்கள் கண்ணியத்தோடு வாழ சுதந்திரமும் திறனும் இருப்பதை உறுதி செய்தல். காலநிலை மாற்றத்தின் பின்னணியில், மனித வாழ்வின் முக்கிய மையமானது, மக்கள் தங்கள் நலன்களின் சார்பாகச் செயல்படவும் கண்ணியத்துடன் வாழவும் தேவையான உலகளாவிய மற்றும் கலாச்சார ரீதியாகக் குறிப்பிட்ட, பொருள் மற்றும் பொருளற்ற கூறுகளை உள்ளடக்கியது. | AR5 WG2 |
| தாக்கங்கள் | இயற்கை மற்றும் மனித அமைப்புகளில் உணரப்பட்ட அபாயங்களின் விளைவுகள், காலநிலை தொடர்பான அபாயங்கள் (தீவிர வானிலை மற்றும் காலநிலை நிகழ்வுகள் உட்பட), வெளிப்பாடு மற்றும் பாதிப்பு ஆகியவற்றின் தொடர்புகளால் ஆபத்துகள் ஏற்படுகின்றன. தாக்கங்கள் பொதுவாக வாழ்க்கையில் ஏற்படும் பாதிப்புகளைக் குறிக்கின்றன; வாழ்வாதாரங்கள்; உடல்நலம் மற்றும் நல்வாழ்வு; சூழலியல் அமைப்புகள் மற்றும் இனங்கள்; பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உடைமைகள்; சேவைகள் (சூழலியல் அமைப்புச் சேவைகள் உட்பட); மற்றும் உள்கட்டமைப்பு. இதனால் ஏற்படும் பாதிப்புகள் அல்லது விளைவுகள், பாதகமானதாகவோ அல்லது நன்மை பயப்பதாகக்கூட இருக்கலாம். | SR1.5 |
| தாக்க மதிப்பீடு | நாணய மற்றும் நாணயமற்ற வரையறைகளில், இயற்கை மற்றும் மனித அமைப்புகளில் காலநிலை மாற்றத்தின் விளைவுகளை அடையாளம் கண்டு மதிப்பிடும் நடைமுறை. | AR5 WG2 |
| பூர்விக மக்கள் | பூர்விக மக்களும் தேசங்களும், தங்கள் பிராந்தியங்களில் படையெடுப்புக்கு | AR5 WG2 |

| Glossary Term | Definition | Source |
|---|---|---|
| | முந்தைய மற்றும் காலனித்துவத்திற்கு முந்தைய சமூகங்களுடன் வரலாற்றுத் தொடர்ச்சியைக் கொண்டிருப்பதால், அந்த பிராந்தியங்களில் அல்லது அவற்றின் சில பகுதிகளில் இப்போது நிலவும் சமூகங்களின் பிற துறைகளிலிருந்து தங்களை வேறுபடுத்திக் கொள்கின்றன. அவை தற்போது, சமூகத்தின் முக்கியமாக ஆதிக்கம் செலுத்தாத துறைகளை உருவாக்குகின்றன. மேலும் அவை எதிர்கால சந்ததியினருக்கு அவர்களுடைய மூதாதையரின் பிரதேசங்களையும் அவர்களின் இன அடையாளத்தையும், பாதுகாக்கவும் அபிவிருத்தி செய்யவும் கடத்தவும் தீர்மானிக்கப்படுகின்றன. சொந்த கலாச்சார முறைகள், சமூக நிறுவனங்கள் மற்றும் பொதுவான சட்ட அமைப்பு. | |
| தொழிற்புரட்சி | 18-ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் பிரிட்டனில் தொடங்கி ஐரோப்பாவிற்கும், பின்னர் அமெரிக்கா உள்ளிட்ட பிற நாடுகளுக்கும் பரவுகின்ற தொலைதூர சமூக மற்றும் பொருளாதார விளைவுகளுடன் கூடிய விரைவான தொழில்துறை வளர்ச்சியின் காலம். நீராவி இயந்திரத்தின் கண்டுபிடிப்பு, இந்தத் தொழில்துறை வளர்ச்சியின் முக்கியமான தூண்டுதலாக இருந்தது. தொழிற்புரட்சி, புதைபடிம எரிபொருள்களின் பயன்பாட்டை அதிகரித்ததோடு, குறிப்பாக புதைபடிம கரிம வாயு வெளியேற்றத்தின் தொடக்கமாகக் குறிப்பிடப்படுகின்றது. | AR5 SYR |
| முறைசாராத் துறை | பதிவு செய்யப்படாத அல்லது உத்தியோகபூர்வ விதிமுறைகளுக்குப் புறம்பான வணிக நிறுவனங்கள் (பெரும்பாலும் சிறியவை). முறைசாரா துறையை உருவாக்கும் வணிகங்களில், உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் அல்லது சேவைகளின் மதிப்பு, பணியமர்த்தப்பட்ட எண்கள், சட்டவிரோதத்தின் அளவு மற்றும் முறைசார் துறையுடனான தொடர்பு ஆகியவற்றில் பெரிய வேறுபாடு உள்ளது. பல முறைசாரா நிறுவனங்கள் முறையான துறை நிறுவனங்களின் சில பண்புகளைக் கொண்டுள்ளன. மேலும் சிலர் சட்டரீதியான பாதுகாப்பு அல்லது வேலைவாய்ப்பு சலுகைகள் இல்லாததால் முறையான துறையில் முறைசாரா வேலைவாய்ப்பில் உள்ளனர். | AR5 WG2 |
| முறைசாரா தீர்வு | குறைந்தபட்சம் ஓர் அளவுகோல் மூலமாக, உத்தியோகபூர்வ விதிமுறைகளுக்குப் புறம்பான குடியேற்றங்கள் அல்லது குடியிருப்புப் பகுதிகளுக்கு வழங்கப்படும் வரையறை. பெரும்பாலான முறைசாரா | AR5 WG2 |

| Glossary Term | Definition | Source |
|---|---|---|
| | குடியேற்றங்கள் மோசமான வீடுகளைக் கொண்டுள்ளன (தற்காலிக பொருள்களின் பரவலான பயன்பாட்டுடன்) மற்றும் அதிகளவில் மக்கள் கூட்டத்துடன் சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலத்தில் உருவாக்கப்படுகின்றன. இதுபோன்ற பெரும்பாலான குடியிருப்புகளில், பாதுகாப்பான நீர், சுகாதாரம், வடிகால், நடைபாதை சாலைகள் மற்றும் அடிப்படை சேவைகளுக்கான ஏற்பாடு போதுமானதாக இல்லை அல்லது குறைவு. சேரி என்ற பதம் பெரும்பாலும் முறைசாரா குடியேற்றங்களுக்கு பயன்படுத்தப்படுகின்றது, இருப்பினும் பல முறைசாரா குடியேற்றங்கள் நல்ல தரமான குடியிருப்புப் பகுதிகளாக உருவாகின்றன, குறிப்பாக அரசாங்கங்கள் இத்தகைய வளர்ச்சியை ஆதரிக்கின்றன. | |
| நிறுவனங்கள் | நிறுவனங்கள் மனிதத் தொடர்புகளை வழிநடத்தும் கட்டுப்படுத்தும் மற்றும் வடிவமைக்கும் சமூக அமைப்புகளின் பொதுவான விதிமுறைகள். நிறுவனங்கள், சட்டங்கள் மற்றும் கொள்கைகள் போன்ற முறையானவை ஆகவும், அல்லது விதிமுறைகள் மற்றும் மரபுகள் போன்ற முறைசாராதவையாகவும் இருக்கலாம். பாராளுமன்றம், ஒழுங்குமுறை முகவர் நிலையம், தனியார் நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்புகள் போன்ற நிறுவனங்களின் கட்டமைப்புகள் மற்றும் அவை உருவாக்குகின்ற சலுகைகளுக்குப் பதிலளிக்கும் வகையில் செயல்படுகின்றன. நிறுவனங்கள் நேரடிக் கட்டுப்பாடு, ஊக்கத்தொகை மற்றும் சமூகமயமாக்கல் செயல்முறைகளின் மூலமாக மனிதத் தொடர்புகளை வழிநடத்த, கட்டுப்படுத்த மற்றும் வடிவமைக்க முடியும். | *AR5 WG2* |
| ஒருங்கிணைந்த நீர்வள மேலாண்மை | முக்கிய சூழலியல் அமைப்புகளின் நீடித்த நிலையான தன்மையை சமரசம் செய்யாமல் பொருளாதார மற்றும் சமூக நலனைச் சமமான முறையில் அதிகரிக்க நீர், நிலம் மற்றும் அவை தொடர்பான வளங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் நிர்வாகத்தை ஊக்குவிக்கின்ற ஒரு செயல்முறை. | *SR1.5* |
| ஒருங்கிணைந்த கடலோர மண்டல மேலாண்மை | கடலோரப் பகுதிகளை நிலையான முறையில் நிர்வகிப்பதற்கான ஒருங்கிணைந்த அணுகுமுறை, அனைத்து கடலோர வாழ்விடங்களையும் பயன்பாடுகளையும் கணக்கில் எடுத்துக் கொள்கின்றது. | *AR5 SYR* |
| காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச இடை | அறிவியல் தகவல்களின் புறநிலை ஆதாரத்தை வழங்குவதற்காக உலக | *UN* |

| Glossary Term | Definition | Source |
|---|---|---|
| அரசுக்குழு | வானிலை அமைப்பு, மற்றும் ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் அமைப்பு ஆகியவற்றால் காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச இடைஅரசுக் குழு அமைக்கப்பட்டது. 2013-ம் ஆண்டில் காலநிலை மாற்றம் குறித்த சர்வதேச இடை அரசுக் குழு, தனது ஐந்தாவது மதிப்பீட்டு அறிக்கையை வெளியிட்டபோது, காலநிலை மாற்றத்தில் மனித நடவடிக்கைகளின் பங்கு குறித்துக் கூடுதல் தெளிவை வழங்கியது. அதன் முடிவில் காலநிலை மாற்றம் உண்மையானது, இது திட்டவட்டமானது மற்றும் இதற்கு முக்கியக் காரணம் மனித நடவடிக்கைகளே என்றும் அந்த மதிப்பீட்டு அறிக்கை குறிப்பிட்டது. | |
| காப்பீடு/மறுகாப்பீடு | ஆபத்திலுள்ள குடும்பங்கள், வியாபாரங்கள் மற்றும்/அல்லது அரசாங்கங்களின் தொகுப்பில் ஆபத்தைப் பகிர்ந்து கொள்வதற்கும் மாற்றுவதற்கும் தேவைப்படுகின்ற நிதியை வழங்குகின்ற செயல்முறை. | *SREX* |
| க்யோட்டோ நெறிமுறை | க்யோட்டோ நெறிமுறை ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றத்திற்கான கட்டமைப்பின் மாநாடு என்பது 1997-ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஜப்பானிலுள்ள க்யோட்டோவில் கட்சிகளின் மாநாட்டினுடைய மூன்றாவது அமர்வில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு சர்வதேச ஒப்பந்தமாகும். இது காலநிலை மாற்றத்திற்கான கட்டமைப்பின் மாநாட்டில் சேர்க்கப்பட்டுள்ளதுபோக, சட்டபூர்வமாகப் பிணைக்கும் கடமைகளையும் கொண்டுள்ளது. நெறிமுறையின் இணைப்பு ஆ-வில் சேர்க்கப்பட்டுள்ள நாடுகள் (பெரும்பாலும் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பிலுள்ள நாடுகள் மற்றும் பொருளாதாரத்தில் மாற்றம் கொண்ட நாடுகள்) முதல் மானியக் காலத்தில் (2008-12) மனிதர்கள் வெளியிடும் பசுமை இல்ல வாயுக்களைக் குறைந்தபட்சம் 1990-ம் ஆண்டு இருந்த நிலைகளைவிட 5 சதவிகிதம் குறைக்க வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டது. க்யோட்டோ நெறிமுறை 2005-ம் ஆண்டு பிப்ரவரி 16-ம் தேதியன்று நடைமுறைக்கு வந்தது. 2018-ம் ஆண்டு மே மாத நிலவரப்படி, 192 கட்சிகள் (அதாவது 191 நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியமும்) இந்த நெறிமுறை உடன்படிக்கையில் இருந்தன. | *SR1.5* |
| நிலம் கையகப்படுத்துதல் | தொழில்துறை வேளாண்மை, தணிக்கும் திட்டங்கள் அல்லது உள்ளூர்ச் சமூகங்கள் மற்றும் சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிரான விளைவுகளை ஏற்படுத்துகின்ற | *AR5 WG2* |

| Glossary Term | Definition | Source |
|---|---|---|
| | உயிரி எரிபொருள்களுக்கான நிலம் அல்லது நீர் உரிமைகளைப் பெருமளவில் கையகப்படுத்துதல். | |
| நிலப்பயன்பாடு மற்றும் நிலப்பயன்பாட்டில் நிகழும் மாற்றம் | நிலப்பயன்பாடு என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பு வகைகளில் (மனிதச் செயல்களின் தொகுப்பு) மேற்கொள்ளப்பட்ட மொத்த ஏற்பாடுகள், செயல்பாடுகள் மற்றும் உள்ளீடுகளைக் குறிக்கின்றது. நிலப்பயன்பாடு என்ற பதம், நிலம் நிர்வகிக்கப்படும் சமூக, பொருளாதார நோக்கங்களுக்காவும் பயன்படுத்தப்படுகின்றது (உதாரணத்திற்கு, மேய்ச்சல், மரம் வெட்டுதல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு). நிலப் பயன்பாட்டில் மாற்றம் என்பது, மனிதர்கள் நிலத்தைப் பயன்படுத்துவதில் அல்லது நிர்வகிப்பதில் ஏற்படுகின்ற மாற்றத்தைக் குறிக்கின்றது. இது நிலப்பரப்பின் நிலவியல் அமைப்பில் மாற்றங்களுக்கு வழிவகுக்கும். நிலப்பரப்பு மற்றும் நிலப் பயன்பாட்டில் நிகழும் மாற்றம் மேற்பரப்பு எதிரொளித்திறன் மீது தாக்கம் ஏற்படுத்துகின்றன. மேலும் ஆவியாதல், பசுமை இல்ல வாயு மூழ்கிகள் அல்லது காலநிலை அமைப்பின் பிற பண்புகள் ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். மேலும் இது கதிர்வீச்சு இயக்கத்தை அதிகரிப்பதோடு, உள்ளூர் மற்றும் சர்வதேச அளவில் காலநிலையின்மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. | AR5 WG2 |
| வாழ்வாதாரங்கள் | வாழ்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட வளங்கள் மற்றும் அதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள். வாழ்வாதாரம் என்பது பொதுவாக மக்களால் அணுக முடிகின்ற உரிமைகள் மற்றும் உடைமைகளால் தீர்மானிக்கப்படுகின்றன. மனித, சமூக, இயற்கை, இயற்பியல் அல்லது நிதி சார்ந்து இத்தகைய உடைமைகளை வகைப்படுத்தலாம். | AR5 WG2 |
| உள்ளூர் பேரிடர் மேலாண்மை | குடிமக்கள், சமூகங்கள், அரசாங்கம், லாபநோக்கமற்ற அமைப்புகள், நிறுவனங்கள், தொழில்கள் போன்றவை, பேரிடரை அடையாளம் காணுதல், பகுப்பாய்வு செய்தல், மதிப்பிடுதல், கண்காணித்தல் மற்றும் சிகிச்சையளித்தல் ஆகியவற்றில் பங்கெடுப்பதோடு அவற்றின்மீது உரிமையும் கொண்டுள்ளன. வெளிப்பாடு, ஆபத்து அல்லது பாதிப்பைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை இதில் எதிர்பார்க்கலாம்; மேலும் இடமாற்றத்தில் இருக்கின்ற ஆபத்து, பேரிடருக்கு எதிர்செயலாற்றுவதை மேம்படுத்துதல் | SREX |

| Glossary Term | Definition | Source |
|---|---|---|
| | மற்றும் மீட்டெடுத்தல்; மற்றும் கூடுதலாக ஒட்டுமொத்தமாகத் திறன்களை அதிகரிப்பதையும் இது ஊக்குவிக்கின்றது. பொதுவாக பிராந்திய, தேசிய அல்லது சர்வதேச மட்டங்களில் வெளிப்புற பங்களிப்பார்களுடன் ஒருங்கிணைவது மற்றும் அவர்களுடைய ஆதரவு உள்ளூர் பேரிடர் மேலாண்மைக்குத் தேவைப்படுகின்றது. சமூக அடிப்படையிலான பேரிடர் மேலாண்மை என்பது உள்ளூர் பேரிடர் மேலாண்மையின் ஒரு துணைக்குழு. அந்தத் துணைக்குழுவில், சமூக உறுப்பினர்களும் நிறுவனங்களும் முடிவெடுக்கும் மையத்தில் இருப்பர். | |
| உட்பட்டிருத்தல் | பங்கேற்பாளர்கள் ஒரு மாற்றுத் தரத்துடன் சிறப்பாக இருக்கையில், சந்தை ஒரு குறிப்பிட்ட தரத்திற்குள் சிக்கியிருக்கும்போது, உட்பட்டிருத்தல் நிகழ்கின்றது. இந்த அறிக்கையில், உட்பட்டிருத்தல் பாதை சார்புடையதாக மிகவும் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது, இது ஒரு கட்டத்தில் முடிவுகள், நிகழ்வுகள் அல்லது முடிவுகளின் தழுவல், தணிப்பு அல்லது பிற செயல்கள் அல்லது விருப்பங்களை ஒரு பிந்தைய கட்டத்தில் கட்டுப்படுத்தும் பொதுவான சூழ்நிலை. | AR5 SYR |
| இழப்பு மற்றும் சேதம் | 2013-ம் ஆண்டின் இழப்பு மற்றும் சேதம் குறித்த வார்சா செயல்முறையை நிறுவியதைத் தொடர்ந்து காலநிலை மாற்றம் குறித்த கட்டமைப்பிற்கான ஐக்கிய நாடுகள் அமைப்பின் மாநாட்டின்கீழ் 'தீவிர நிகழ்வுகள் மற்றும் மிதமான ஆரம்பக்கட்ட நிகழ்வுகள் உட்பட, குறிப்பாக காலநிலை மாற்றத்தின் பாதகமான விளைவுகளுக்குப் பாதிக்கப்படக்கூடிய வளரும் நாடுகளில், காலநிலை மாற்றத்தின் தாக்கங்களோடு தொடர்புடைய இழப்பு மற்றும் சேதங்களை குறிப்பிடுகின்றது.' | SR1.5 |
| குறைந்த வருத்தக் கொள்கை | தற்போதைய காலநிலையின் கீழ் நிகர சமூக மற்றும் பொருளாதார நன்மைகளை உருவாக்குகின்ற கொள்கை மற்றும் எதிர்கால காலநிலை மாற்ற சூழ்நிலைகள். | AR5 WG2 |
| தகவமைப்புக் குறைபாடு | பசுமை இல்ல வாயு வெளியீடு அத்கரித்தல், காலநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் அதிகரித்தல், அல்லது நல்வாழ்வுக்கான வாய்ப்பு குறைதல், ஆகியவை காலநிலை தொடர்பான தீவிர பாதிப்புகளுக்கு தற்போதோ அல்லது எதிர்காலத்திலோ வழிவகுக்கின்றன. இதில், தகவமைப்புக் குறைபாடு என்பது ஒரு பொதுவான திட்டமிடப்படாத விளைவு. | SR1.5 |
| இடப்பெயர்வு | இடப்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு, | SR1.5 |

| Glossary Term | Definition | Source |
|---|---|---|
| | அதை, "ஒரு நபர் அல்லது ஒரு குழு, ஒரு சர்வதேச எல்லையைத் தாண்டியோ அல்லது ஒரு நாட்டிற்குள்ளேயே வேறு பகுதிகளுக்கோ நகருதல். ஒரு மக்கள் கூட்டம், எந்த மக்கள் கூட்டமாக இருப்பினும், அதன் அளவு, காரணங்கள், எதுவாக இருந்தாலும்,, அகதிகள், இடம் பெயரும் நபர்கள், பொருளாதாரக் காரணங்களால் இடம் பெயர்பவர்கள், குடும்ப மறு ஒருங்கிணைப்பு உள்ளிட்ட பிற காரணங்களுக்காக இடம் பெயர்பவர்கள் என்று அனைத்து வகையான இடப்பெயர்வும் இதில் அடங்கும்.' என்று வரையறுக்கின்றது. (IOM, 2018) | |
| மட்டுப்படுத்துதல்(பேரிடர் மற்றும் பேரழிவு) | ஆபத்து, வெளிப்பாடு மற்றும் எளிதில் பாதிக்கும் தன்மை ஆகியவற்றைக் குறைக்கும் செயல்பாடுகளின் மூலம் இயற்பியல் அபாயங்களால் (மனிதத் தூண்டுதல்கள் உட்பட) ஏற்படக்கூடிய பாதகமான தாக்கங்களைக் குறைத்தல். | AR5 WG2 |
| மட்டுப்படுத்துதல் (காலநிலை மாற்றத்தை) | காலநிலை மாற்றத்தைத் தூண்டுகின்ற மூலாதாரங்களைக் குறைக்க, அல்லது பசுமை இல்ல வாயுக்களைக் கிரகித்து, மூழ்கடிக்கத் தேவைப்படுகின்ற மனிதத் தலையீடு. | AR5 WG2 |
| தேசியளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகள் | பாரிஸ் உடன்படிக்கையில் இணைந்த நாடுகள், அவற்றின் உமிழ்வுகளைக் குறைப்பதற்கான திட்டங்களைக் கோடிட்டுக் காட்டும் காலநிலை மாற்றத்திற்கான கட்டமைப்பிற்கான ஐக்கிய நாடுகள் மாநாட்டின் கீழ் பயன்படுத்தப்படுகின்ற பதம். தேசியளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகள் காலநிலை மாற்றத் தாக்கங்களுக்கு எவ்வாறு தகவமைத்துக்கொள்வது என்பதையும் குறைந்த கரிமப் பாதைகளைப் பின்பற்றுவதற்கும் காலநிலை விரிதிறனைக் கட்டமைப்பதற்குச் சில நாடுகளுக்குத் தேவைப்படுகின்ற ஆதரவு. பாரிஸ் உடன்படிக்கையின் பிரிவு 4, பத்தி 2-ன் படி, ஒவ்வொரு கட்சியும் அதை அடைய விரும்புகின்ற அடுத்தடுத்த தேசியளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகளைத் தயாரித்து, பராமரிக்கவேண்டும். 2015-ம் ஆண்டு, பாரிசில் நடந்த 21-வது மாநாட்டிற்கு முன்னதாக, அந்த மாநாட்டில் கலந்துகொள்ளவிருந்த நாடுகள், நோக்கம் கொண்ட தேசியளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகளைச் சமர்ப்பித்தன. பாரிஸ் உடன்படிக்கையில் நாடுகள் இணையும்போது, அவர்கள் வேறுவிதமாக முடிவு செய்யாதவரை, அவர்கள் சமர்ப்பித்த பங்களிப்புகள் முதல்முறையாக தேசியளவில் | SR1.5 |

| Glossary Term | Definition | Source |
| --- | --- | --- |
| | தீர்மானிக்கப்பட்ட பங்களிப்பு என்றாகின்றது. | |
| நிகர பூஜ்ஜிய உமிழ்வு | மனிதர்கள் வளிமண்டலத்தில் வெளியிடுகின்ற பசுமை இல்ல வாயுக்கள், ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் மானுடவியல் அகற்றுதல்களால் சமன்படுத்தப்படும்போது நிகர பூஜ்ஜிய உமிழ்வை அடைகின்றது. பல்வேறு பசுமை இல்ல வாயுக்கள் எங்கு சம்பந்தப்பட்டிருக்கின்றனவோ, அங்கு நிகர பூஜ்ஜிய உமிழ்வுகளின் அளவு வெவ்வேறு வாயுக்களின் உமிழ்வை ஒப்பிடுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட காலநிலை மெட்ரிக்கை பொறுத்தது (புவி வெப்பமடைதல் திறன், புவி வெப்பநிலை மாற்று திறன் மற்றும் பிற தேர்ந்தெடுக்கப்பட்ட தொடுவானம் போன்றவை). | SR1.5 |
| கடல் அமிலமயமாதல் | கடல் அமிலமயமாதல் என்பது கடலின் கார-அமில அளவீடான pH மதிப்பைக் குறைப்பதை, பொதுவாக பல பத்தாண்டுகள் அல்லது அதற்கும் மேலாக நீளும் காலகட்டத்திற்கு நடக்கும் செயல்முறையைக் குறிக்கின்றது. இது முதன்மையாக, கரிம வாயுவை வளிமண்டலத்திலிருந்து கிரகித்துக் கொள்வதால் ஏற்படுகின்றது, ஆனால் இது பிற வேதியியல் சேர்மங்களாலும் சில வேதிமங்களை நீக்குவதாலும்கூட, நிகழ்கின்றது. மானுடவியல் கடல் அமிலமயமாக்கல் என்பது, மனித செயல்பாடுகளால் நிகழும் pH மதிப்பைக் குறைக்கும் கூறுகளைக் குறிக்கின்றது. | AR5 SYR |
| பாரிஸ் உடன்படிக்கை | காலநிலை மாற்றத்திற்கான கட்டமைப்பு குறித்த ஐக்கிய நாடுகள் மாநாட்டின் கீழ், 2015-ம் ஆண்டு, டிசம்பர் மாதம் பிரான்சிலுள்ல பாரிஸ் நகரத்தில், கட்சிகளுக்கான மாநாட்டின் 21-வது அமர்வில் பாரிஸ் உடன்படிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. 196 நாடுகள் இந்த உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டு, நவம்பர் 4, 2016-ம் ஆண்டு முதல் நடைமுறைக்குக் கொண்டுவந்தன. 2018-ம் ஆண்டு மே மாத நிலவரப்படி, 195 கையெழுத்துகள் அந்த ஒப்பந்தத்தில் இருந்தன, அதோடு, 177 நாடுகளால் இது அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 'உலகளாவிய சராசரி வெப்பநிலையைத் தொழில்துறைக்கு முந்தைய நிலைகளைவிட 2 டிகிரி செல்ஷியஸுக்கும் குறைவாக வைத்திருப்பது மற்றும் வெப்பநிலையை தொழில்துறைக்கு முந்தைய அளவுகளைவிட 1.5 டிகிரி செல்ஷியஸாகக் கட்டுப்படுத்தும் முயற்சிகளைத் தொடர்வது,' என்பதே | SR1.5 |

| Glossary Term | Definition | Source |
|---|---|---|
| | பாரிஸ் ஒப்பந்தத்தின் குறிக்கோள்களில் ஒன்று. இந்த குறிக்கோள் காலநிலை மாற்றம் உண்டாக்குகின்ற அபாயங்கள் மற்றும் தாக்கங்களைக் கணிசமாகக் குறைக்கும். கூடுதலாக, இந்த ஒப்பந்தம் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைச் சமாளிக்கும் நாடுகளுடைய திறனை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. | |
| தடச்சார்பு | ஒரு கட்டத்தில் முடிவுகள், நிகழ்வுகள், விளைவுகள், தகவமைத்தல், மட்டுப்படுத்துதல், அல்லது இதர செயல்பாடுகள், விருப்பங்களைக் கட்டுப்படுத்துகின்ற ஒரு பொதுவான சூழ்நிலை. | AR5 WG2 |
| பாதைகள் | எதிர்கால நிலையை நோக்கிய இயற்கை மற்றும் மனித அமைப்புகளின் தற்காலிக பரிணாமம். பாதைகள் என்ற கருத்து, தரமான காட்சிகள் அல்லது சாத்தியமான எதிர்காலங்களின் விவரிப்புகள் முதல் விரும்பத்தக்க சமூக இலக்குகளை அடைய தீர்வு சார்ந்த முடிவெடுக்கும் செயல்முறைகள் வரை இதில் உள்ளன. பாதை அணுகுமுறைகள் பொதுவாக, உயிர் இயற்பியல், தொழில்நுட்ப- பொருளாதார மற்றும் சமூக-நடத்தை போக்குகளில் கவனம் செலுத்துகின்றன. மேலும் இது, பல்வேறு அளவுகளில், இயக்கவியல், குறிக்கோள், மற்றும் சம்பந்தப்பட்ட அமைப்புகளை உள்ளடக்கியது. | SR1.5 |
| நகரமயமாகும் பகுதிகள் | பார்ப்பதற்குக் கிராமப்புறமாகத் தோன்றுகின்ற நகர்ப்புறப் பகுதி, உண்மையில் அன்றாட நடவடிக்கைகளில் நகரத்துடைய செயல்பாட்டுடன் இணைக்கப்பட்டிருக்கும் பகுதிகளே நகரமயமாகும் பகுதிகள். | SR1.5 |
| திட்ட ஏற்பாடு | ஒரு திட்ட ஏற்பாடு என்பது ஓர் அளவு அல்லது அளவுகளின் எதிர்காலப் பரிணாம வளர்ச்சியாகும். இது பெரும்பாலும் ஒரு மாதிரியின் துணையோடு கணக்கிடப்படுகின்றது. கணிப்புகளைப் போல் இல்லாமல், திட்ட ஏற்பாடுகள் நிபந்தனைகளுக்கு உட்பட்டவை, உதாரணத்திற்கு, உணரக்கூடிய அல்லது உணரமுடியாத, எதிர்கால சமூகப் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப முனேற்றங்கள். | AR5 WG2 |
| வறுமை | வறுமை என்பது ஒரு சிக்கலான கருத்தாக்கம். இது பல்வேறு வரையறைகளிலிருந்து உருவாகின்ற பல்வேறு வரையறைகளைக் கொண்டுள்ளது. இது பொருளியல் சூழ்நிலைகள் (தேவை, இழப்பு வடிவம், அல்லது வரையறுக்கப்பட்ட வளங்கள் | AR5 WG2 |

| Glossary Term | Definition | Source |
|---|---|---|
| | போன்றவை), பொருளாதார நிலைமைகள் (வாழ்க்கைத் தரம், சமத்துவமின்மை அல்லது பொருளாதார நிலை போன்றவை) மற்றும் சமூக உறவுகள் (சமூக வர்க்கம், சார்புநிலை, விலக்கல், அடிப்படை பாதுகாப்பு இல்லாமை, அல்லது உரிமை இல்லாமை). | |
| வறுமை பொறி | வறுமை பொறி என்பது பல துறைகளில் வெவ்வேறு விதமாகப் புரிந்துகொள்ளப்படுகின்றது. சமூக அறிவியலில், முதன்மையாக தனிநபர், வீடு அல்லது சமூக மட்டத்தில் பயன்படுத்தப்பட்ட கருத்து, உற்பத்தி செய்யமுடியாத அல்லது வளைந்துகொடுக்காத வளங்கள் காரணமாக வறுமையிலிருந்து தப்பிப்பது சாத்தியமற்றதாக மாறும் சூழ்நிலையை விவரிக்கின்றது. வறுமை பொறியை ஒரு முக்கியமான குறைந்தபட்ச சொத்து வரம்பாகவும் காணலாம். அதற்குக் கீழே, குடும்பங்கள் தங்கள் குழந்தைகளுக்கு வெற்றிகரமாகக் கல்வி கற்பிக்கவோ, உற்பத்தி செய்யும் உடைமைகளை வளர்த்துக்கொள்ளவோ, வறுமையிலிருந்து வெளியேறவோ முடியாது. தீவிர வறுமை என்பதே ஒருவிதமான வறுமை பொறிதான். ஏனெனில், ஏழைகளுக்குச் சமுதாயத்தில் அர்த்தமுள்ள வகையில் பங்கேற்க வழி இல்லை. பொருளாதாரத்தில், வறுமை பொறி என்ற பதம் பெரும்பாலும் தேசிய அளவீடுகளில் பயன்படுத்தப்படுகின்றது. இதுவொரு சுய-நிலைத்தன்மையைக் குறிக்கின்றது. அங்கு ஒரு பொருளாதாரம் மோசமான சுழற்சியில் சிக்கி, தொடர்ந்து வளர்ச்சியடையாமல் பாதிக்கப்படுகின்றது(Matsuyama, 2008). இவைபோல, இன்னும் பல முன்மொழியப்பட்ட மாதிரிகள் வறுமை பொறிகளுக்கு வழங்கப்படுகின்றன. | *AR5 WG2* |
| கதிரியக்க விரைவுபடுத்துதல் | முந்தைய சர்வதேச இடை அரசுக் குழுவின் மதிப்பீடுகளைப் போலவே துரிதப்படுத்தும் காரணிகளின் வலிமையும் ஒரு சதுர மீட்டருக்கு (W / m2) யூனிட் வாட்களில் கதிரியக்க விரைவுபடுத்துதல் அளவிடப்படுகின்றது. | *AR5 SYR* |
| காடழிப்பு மற்றும் காடு சீரழிவதிலிருந்து ஏற்படும் உமிழ்வைக் குறைத்தல் (REDD+) | காடுகளில் சேமித்து வைக்கபடுகின்ற கரிமங்களுக்கு பொருளாதார மதிப்பை உருவாக்குவதற்கான முயற்சி, வளரும் நாடுகளின் வனப்பகுதிகளிலிருந்து உமிழ்வைக் குறைப்பதற்கும் குறைந்த கரிமப் பாதைகளில் நீடித்த நிலையான வளர்ச்சிக்காக முதலீடு செய்வதற்கும் ஊக்கத்தொகைகளை வழங்குவதற்குமான முயற்சி. இது காடழிப்பைத் தவிர்ப்பதன் மூலம், கரிம வெளியீட்டைக் | *AR5 SYR* |

| Glossary Term | Definition | Source |
|---|---|---|
| | கட்டுப்படுத்துவதற்கான ஒரு வழிமுறை. காடழிப்பு மற்றும் காடுகள் சீரழிவுக்கு அப்பாற்பட்டதாக இது இருக்கின்றது. காடுகள் பாதுகாப்பு, காடுகளின் நிலையான மேலாண்மை மற்றும் காட்டின் கரிம இருப்பை மேம்படுத்துதல் ஆகியவற்றையும் இது உள்ளடக்கியது. இந்தக் கருத்து முதன்முதலில் 2005-ல் மான்ட்ரியலில் நடந்த கட்சிகளின் மாநாட்டினுடைய 11-வது அமர்வில் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் 2007-ம் ஆண்டில் பாலி நகரில் அந்த 13-வது அமர்வில் அதிக அங்கீகாரம் வழங்கப்பட்டு, செயல்திட்டத்தில் சேர்க்கப்பட்டது. வளரும் நாடுகளில் காடழிப்பு மற்றும் காடுகள் சீரழிவதிலிருந்து ஏற்படும் உமிழ்வைக் குறைத்தல் மட்டுமின்றி, காடுகள் பாதுகாப்பு, காட்டின் கரிமப் பங்குகளை மேம்படுத்துதல் ஆகியவை தொடர்பான பிரச்சனைகள் பற்றிய அணுகுமுறைகள் மற்றும் நேர்மறையான ஊக்கத்தொகைகளை வழங்குதல். | |
| பிராந்தியம் | ஒரு பிராந்தியம் என்பது குறிப்பிட்ட புவியியல் மற்றும் காலநிலை அம்சங்களால் வகைப்படுத்தப்படுகின்ற ஒரு நிலவியல் பகுதி. நிலப்பரப்பு, நிலப் பயன்பாட்டுப் பண்புகள் மற்றும் ஏரிகள் போன்ற பிராந்திய மற்றும் உள்ளூர் அளவிலான அம்சங்கள் மற்றும் பிற பிராந்தியங்களிலிருந்து ஏற்படுகின்ற தாக்கங்களால் ஒரு பிராந்தியத்தின் காலநிலை பாதிக்கப்படுகின்றது. | AR5 WG1 |
| பிரதிநிதி செறிவுப் பாதைகள் | பசுமை இல்ல வாயுக்கள், தூசுப்படலங்கள் மற்றும் வேதியியல் ரீதியாகச் செயல்படும் வாயுக்கள், அத்துடன் நிலப் பயன்பாடு/நிலப்பரப்பு ஆகியவற்றின் முழு தொகுப்பின் தொடர் உமிழ்வுகள் மற்றும் செறிவுகளை உள்ளடக்கிய காட்சிகள்(Moss et al., 2008). பிரதிநிதி என்ற சொல், ஒவ்வொரு பிரதிநிதி செறிவுப் பாதைகள் குறிப்பிட்ட கதிரியக்கப் பண்புகளுக்கு வழிவகுக்கும் பல சாத்தியமான காட்சிகளில் ஒன்றை மட்டுமே வழங்குவதைக் குறிக்கின்றது. பாதை என்ற பதம் இங்கு, நீண்ட கால செறிவு நிலைகளை மட்டுமல்ல, அந்த முடிவை அடைவதற்காக காலப்போக்கில் எடுக்கப்பட்ட பாதை என்பதையும் வலியுறுத்துகின்றது (Moss et al., 2010). | AR5 SYR |
| நெகிழ்திறன் | ஓர் அபாயகரமான நிகழ்வு, போக்கு அல்லது இடையூறுகளைச் சமாளிக்கின்ற சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளின் திறன், அவற்றுடைய அத்தியாவசிய செயல்பாடு, அடையாளம் மற்றும் கட்டமைப்பைப் பராமரிக்கும் வழிகளில் எதிர்செயலாற்றுதல் அல்லது | AR5 WG2 |

| Glossary Term | Definition | Source |
|---|---|---|
| | மறுசீரமைத்தல் மற்றும் அதேநேரத்தில் தகவமைத்தல், கற்றல் மற்றும் மாற்றத்திற்கான திறனைப் பாதுகாத்தல். | |
| இடர் | மதிப்பு வாய்ந்த ஏதேனும் ஆபத்திலிருக்கும்போது, அங்கு நிச்சயமற்றதாக இருக்கின்ற விளைவுகளுக்கான சாத்தியங்களையும் மதிப்புகளின் பன்முகத்தன்மையையும் அங்கீகரித்தல். நிகழ்வுகள் அல்லது போக்குகளின் விளைவுகளைப் பொறுத்து அபாயகரமான நிகழ்வுகள் அல்லது போக்குகள் நிகழ்வதற்கான நிகழ்தகவாக பெரும்பாலும் இடர் குறிப்பிடப்படுகின்றது. பாதிப்பு, வெளிப்பாடு, அபாயம் ஆகியவற்றுடனான தொடர்புகளின் விளைவாக இடர் விளைகின்றது. இந்த அறிக்கையில், இடர் என்ற சொல் முதன்மையாக காலநிலை மாற்ற தாக்கங்களின் இடராகக் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகின்றது. | AR5 WG2 |
| இடர் மதிப்பீடு | அபாயங்களின் தரமான மற்றும் அளவு சார் அறிவியல் மதிப்பீடு. | AR5 WG2 |
| இடர் மேலாண்மை | இடர்களுக்கான சாத்தியக்கூறுகள் மற்றும் விளைவுகளைக் குறைக்க அல்லது விளைவுகளுக்கு எதிர்செயலாற்றுவதற்கான திட்டங்கள், செயல்கள் அல்லது கொள்கைகள். | AR5 WG2 |
| இடர் புலன்காட்சி | இடர்களின் பண்புகள் மற்றும் தீவிரத்தன்மை குறித்து மக்கள் எடுக்கும் அகநிலை தீர்ப்பு. | AR5 WG2 |
| இடர் மாற்றம் | ஒரு தரப்பிலிருந்து மற்றொரு தரப்பிற்கு, நிதி சார்ந்த விளைவுகளை முறையான அல்லது முறைசாராத வழியில் மாற்றுவதற்கான செயல்முறை. இதன்மூலம் ஒரு குடும்பம், சமூகம், தொழில் அல்லது மாநில அதிகாரம் ஒரு பேரழிவு ஏற்பட்ட பின்னர், ஒரு தரப்பிடமிருந்து தேவையான வளங்களைப் பெற்று, சமூக, பொருளாதார பயன்களுக்கு ஈடுசெய்யக்கூடிய விதத்தில் மற்றொரு தரப்புக்கு ஈடாக வழங்கப்படும் நன்மைகள். | SREX |
| காட்சி நிலவரம் | முக்கியமான உந்து சக்திகள், (உதாரணத்திற்கு, தொழில்நுட்ப மாற்றத்தின் விகிதம், விலைகள்) மற்றும் உறவுகள் பற்றிய ஒத்திசைவான மற்றும் நிலையான உள்நாட்டு அனுமானங்களின் அடிப்படையில் எதிர்காலம் எவ்வாறு உருவாகக்கூடும் என்பதற்கான நம்பத்தகுந்த விளக்கம். காட்சி நிலவரம் என்பது கணிப்போ முன்னறிவிப்போ அல்ல என்பதை நினைவில் கொள்ளவேண்டும், ஆனால், முன்னேற்றங்கள் மற்றும் செயல்களின் தாக்கங்களைப் பற்றிய பார்வையை வழங்க அவை பயனுள்ளதாக | AR5 WG2 |

| Glossary Term | Definition | Source |
|---|---|---|
| | இருக்கும். | |
| கடல்மட்ட மாற்றம் | உலகளவிலும் சரி உள்ளூர் அளவிலும் சரி (சார்பு கடல்மட்ட மாற்றம்), கடல்மட்டத்தில் மாற்றங்கள் நிகழலாம். அதற்கான காரணங்கள், (1) கடல்நீரின் அளவில் ஏற்படுகின்ற மாற்றங்களால், கடலின் கன பரிமாணத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள், (2) கடல்நீர் அடர்த்தியில் ஏற்படுகின்ற மாற்றத்தின் காரணமாக, கடலின் கன பரிமாணத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள், (3) கடல் படுகைகளின் வடிவத்தில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் பூமியின் ஈர்ப்பு மற்றும் சுழற்சியில் ஏற்படும் மாற்றங்கள், மற்றும் (4) நிலம் மேலேறுதல் அல்லது கீழிறங்குதல். | *SR1.5* |
| கடல் மேற்பரப்பு வெப்பநிலை | கடலின் முதல் சில மீட்டர்களில் உள்ள மேற்பரப்பின் மொத்த வெப்பநிலையே கடல் மேற்பரப்பு வெப்பநிலை. இது, கப்பல்கள், பாய்கள் மற்றும் சறுக்கல்களால் அளவிடப்படுகின்றது. | *SR1.5* |
| தனிப்படுத்திச் சேமித்தல் | கரிமம் இருக்கும் பொருள்களின், குறிப்பாக கரிம வாயு (CO2), நிலப்பரப்பு அல்லது கடல் நீர்த்தேக்கங்களில், கரிமம் இருக்கும் பொருள்களின் உயர்வு (அதாவது, ஒரு நீர்த்தேக்கத்திற்கு ஒரு பொருளைச் சேர்ப்பது). நிலப் பயன்பாட்டு மாற்றம், காடு வளர்ப்பு, மறுசீரமைப்பு, நிலப்பரப்புகளில் கரிமச் சேமிப்பு மற்றும் விவசாயத்தில் மண்ணுடைய கரிமத்தை மேம்படுத்தும் நடைமுறைகள் (பயிர்நில மேலாண்மை, மேய்ச்சல் நில மேலாண்மை) ஆகியவற்றின் மூலம் வளிமண்டலத்திலிருந்து கரிம வாயுவை நேரடியாக நீக்குவது உயிரியல் வரிசை முறைகளில் அடங்கும். | *AR5 SYR* |
| மூழ்கடிக்கும் செயல்முறை | தூசுப்படலம், பசுமை இல்ல வாயு, தூசுப்படலம் அல்லது பசுமை இல்ல வாயுவின் முன்னோடி, ஆகியவற்றை வளிமண்டலத்திலிருந்து அகற்றுகின்ற எந்தவொரு செயல்முறை, செயல்பாடு அல்லது வழிமுறையையும் இது குறிப்பிடும். | *AR5 SYR* |
| சூரியக் கதிர்வீச்சு மாற்றம் | சூரியக் கதிர்வீச்சு மாற்றம் என்பது வெப்பமயமாதலைக் குறைக்கும் நோக்கத்தோடு, பூமியின் குற்றலை கதிர்வீச்சு பாதீட்டை வேண்டுமென்றே மாற்றியமைப்பதைக் குறிப்பிடுகின்றது. அடுக்கு மண்டல தூசுப்படலங்களைச் செயற்கையாக செலுத்துதல், கடல்பகுதியில் மேகங்கள் பிரகாசமாதல் மற்றும் நில மேற்பரப்பில் சூரியக் கதிர் எதிரொலிப்பு விகிதத்தில் நிகழும் மாற்றம் ஆகியவை முன்மொழியப்பட்ட சூரியக்கதிர்வீச்சு முறைகளுக்கான | *SR1.5* |

| Glossary Term | Definition | Source |
|---|---|---|
| | உதாரணங்கள். | |
| புயல் எழுச்சி | தீவிர வானிலை நிலைமைகள் (குறைந்த வளிமண்டல அழுத்தம் மற்றும் வலுவான காற்று) காரணமாக, கடலின் உயரத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிகழும் தற்காலிக அதிகரிப்பு. புயல் எழுச்சி என்பது எந்த நேரத்திலும் இடத்திலும் அலை மாறுபாட்டிலிருந்து எதிர்பார்க்கப்படும் அளவைவிட அதிகமாக இருப்பதாக வரையறுக்கப்படுகின்றது. | AR5 SYR |
| தகைவூட்டிகள் | வெளிப்படுகின்ற அமைப்பின் மீது இருக்கின்ற முக்கியமான பாதிப்புகள் மற்றும் காலநிலை தொடர்பான அபாயங்கள் எளிதில் தாக்கக்கூடிய வாய்ப்புகள் அதிகரிப்பது போன்ற, பெரும்பாலும் காலநிலை தொடர்பானவை இல்லாத நிகழ்வுகள் மற்றும் போக்குகள் | AR5 WG2 |
| சமூகப்பொருளாதாரச் சூழ்நிலை | மக்கள்தொகை, மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைப் புரிந்துகொள்வதற்கு தொடர்புடைய சமூகப் பொருளாதார காரணிகளின் அடிப்படையில் சாத்தியமான எதிர்காலத்தை விவரிக்கின்ற ஒரு காட்சி நிலவரம். | AR5 WG2 |
| சமூகப் பாதுகாப்பு | வளர்ச்சிக்கான உதவி மற்றும் காலநிலைக் கொள்கையின் சூழலில், பொதுவாக ஏழைகளுக்கு வருமானm அல்லது நுகர்வுசார் இடமாற்றங்களை வழங்கும் பொது மற்றும் தனியார் முன்முயற்சிகளை சமூகப் பாதுகாப்பு விவரிக்கின்றது. இது, பாதிக்கப்படுபவர்களை வாழ்வாதார அபாயங்களுக்கு எதிராகப் பாதுகாக்கின்றது மற்றும் ஒட்டுமொத்தமாக ஒதுக்கப்பட்டவர்களின் சமூக நிலை மற்றும் உரிமைகளை மேம்படுத்தும் நோக்கத்தைக் குறிப்பிடுகின்றது. மேலும் ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய, ஒதுக்கப்பட்ட குழுக்களின் பொருளாதார மற்றும் சமூகப் பாதிப்புகளைக் குறைத்தலே சமூகப் பாதுகாப்பு (Devereux and Sabates-Wheeler, 2004). | AR5 WG2 |
| நீடிப்புத்திறன் | இயற்கை மற்றும் மனித அமைப்புகளின் நீடித்த தன்மையைச் சமமான முறையில் உறுதிப்படுத்தும் ஓர் ஊக்கமிக்க செயல்முறை. | AR5 WG2 |
| வளம்குன்றா வளர்ச்சி | எதிர்கால சந்ததியினரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திறனைத் தக்கவைப்பதில் எவ்வித சமரசமும் செய்யாமல், நிகழ்காலத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வளர்ச்சி முறை. | SREX |
| வளம்குன்றா வளர்ச்சிக்கான 2030 செயல்நிரல் | 2015-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், ஐக்கிய நாடுகள் அமைப்பின் வளம்குன்றா வளர்ச்சிக்கான 17 இலக்குகளை, புதிய உலகளாவிய வளர்ச்சிக் கட்டமைப்பில், மக்கள், பூமி மற்றும் செழிப்புக்கான | AR5 WG2 |

| Glossary Term | Definition | Source |
|---|---|---|
| | செயல்திட்டமாக ஏற்றுக்கொண்டது (UN, 2015). | |
| மீள்எழுச்சிப் புள்ளி | ஓர் அமைப்பு மறு சீரமைத்துக் கொள்வதையும் தாண்டிய அளவுக்கு, அந்த அமைப்பினுடைய பண்புகளில் நடக்கும் மாற்றம், பெரும்பாலும் திடீரென்று இந்த மாற்றம் நடக்கும். மேலும் இந்த மாற்றத்தைத் தூண்டுகின்ற இயக்கிகள் குறைக்கப்பட்டாலும் அது ஆரம்ப நிலைக்குத் திரும்பாது. காலநிலை அமைப்பைப் பொறுத்தவரை, உலகளாவிய அல்லது பிராந்திய அளவிலான காலநிலை ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாறுகின்ற ஒரு முக்கியமான தொடக்கத்தைக் குறிக்கின்றது. இந்த மீள்எழுச்சிப் புள்ளி மீண்டும் மாற்ற முடியாத நிகழ்வாகக்கூட இருக்கலாம். | AR5 SYR |
| மரபு அறிவு | உலகெங்கிலும் உள்ள பூர்வீக மற்றும் உள்ளூர் சமூகங்களின் அறிவு, வரலாறு மற்றும் அனுபவங்களில் ஆழமாக, அடித்தளமாகப் புதைந்திருக்கும் தகவல்கள், புதுமைகள் மற்றும் நடைமுறைகள். பாரம்பர்ய அறிவின் வடிவங்கள், கலாச்சார மற்றும் சுற்றுச்சூழல் மாற்றத்திற்கு ஏற்ற, தகவமைத்துக் கொள்கின்ற மரபு அறிவு. மேலும் பிற வகை அறிவு மற்றும் கண்ணோட்டங்களையும் இது ஒருங்கிணைக்கின்றது. மரபு அறிவு என்பது பொதுவாக ஒரு தலைமுறையிடமிருந்து மற்றொரு தலைமுறைக்கு வாய் வழியாகப் பரவுகின்றது. இது பெரும்பாலும் பூர்வீக அறிவு, உள்ளூர் அறிவு அல்லது மரபுசார் சூழலியல் அறிவு ஆகியவற்றுக்கு ஒத்ததாகப் பயன்படுத்தப்படுகின்றது. | AR5 WG2 |
| மாற்றம் | இயற்கை மற்றும் மனித அமைப்புகளின் அடிப்படைப் பண்புகளில் ஏற்படுகின்ற மாற்றம். | AR5 WG2 |
| ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றத்திற்குரிய கட்டமைப்பிற்கான மாநாடு | 1992-ம் ஆண்டு மே மாதம், இது ஏற்றுக்கொள்ளப்பட்டு, 1992-ம் ஆண்டு ரியோ டி ஜெனீரோவில் நடந்த பூமிக்கான உச்சி மாநாட்டில் கையெழுத்திடப்பட்டது. இது 1994-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடைமுறைக்கு வந்தது. மே 2018 நிலவரப்படி, 197 தரப்புகள் (196 நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியமும்) இதில் உறுப்பினர்களாக இருந்தன. 'காலநிலை அமைப்பில் ஆபத்தான மானுடவியல் தலையீட்டைத் தடுப்பதற்கு, வளிமண்டலத்தில் பசுமை இல்ல வாயு செறிவுகளை நிலைப்படுத்தவேண்டும்' என்பதே இந்த மாநாட்டின் முக்கியமான நோக்கம். கியோட்டோ நெறிமுறை மற்றும் பாரிஸ் உடன்படிக்கை ஆகிய இரண்டு ஒப்பந்தங்களால் மாநாட்டின் விதிகள் | SR1.5 |

| Glossary Term | Definition | Source |
| --- | --- | --- |
| | பின்பற்றப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. | |
| பாதிப்பு | மோசமாகப் பாதிக்கப்படக்கூடிய முனைப்பு அல்லது முன்கணிப்பு. பாதிப்பு என்பது உணர்திறன் அல்லது தீங்கு விளைவிக்கும் தன்மை மற்றும் சமாளிக்கும், மாற்றியமைக்கும் திறன் இல்லாமை உள்ளிட்ட பல்வேறு கருத்துகள் மற்றும் கூறுகளை உள்ளடக்கியது. | *AR5 WG2* |
| காலநிலை அறிவியல் | காலநிலை அறிவியல் என்பது ஒப்பீட்டளவில் நீண்ட கால வானிலை பற்றிய ஆய்வு. பொதுவாக பல பத்தாண்டுகள் முதல் பல நூற்றாண்டுகள் வரை, புவியியல் கால அளவுகள் நீண்டுள்ளன. வளிமண்டலத்தின் பண்புகள் மீதே காலநிலை அறிவியல் கவனம் கொண்டுள்ளது. உதாரணத்திற்கு, வெப்பநிலை, ஈரப்பதம், மற்றும் அதன் சுழற்சி வடிவங்கள், கடல், உயிர்க்கோள மற்றும் நீண்ட கால அளவீடுகளில், புவியியல் ஆகியவற்றோடு இது தொடர்புகொண்டுள்ளது. | *Nature* |
| புதுப்பிக்கத்தக்க ஆற்றல் | நம் வாழ்நாளில் மீண்டும் மீண்டும் புதுப்பித்துக்கொள்கின்ற மூலங்களிலிருந்து கிடைக்கின்ற ஆற்றலே புதுப்பிக்கத்தக்க ஆற்றல். புதுப்பிக்கத்த எரிசக்தி ஆதாரங்களில், காற்று, சூரியன், நீர், உயிர்வளம் (தாவரங்கள்) மற்றும் புவியின் வெப்பம் ஆகியவையும் அடங்கும். | |
| பருவநிலை | வெப்பநிலை, மேகமூட்டம், மழை, காற்று மற்றும் பிற வானிலைகள் சம்பந்தப்பட்ட வளிமண்டலத்தின் நிலை. மிக நீண்ட காலத்திற்குத் தொடரும் சராசரி வானிலையைக் குறிக்கின்ற காலநிலையும் இதுவும் ஒன்றல்ல. காலநிலை வேறு, பருவநிலை வேறு. | |
| தொழில்நுட்பப் பரிமாற்றம் | சமூகத்தின் பல்வேறு பங்குதாரர்களுக்கு மத்தியில் காலநிலை மாற்றத்தின் தாக்கத்தைத் தணிப்பதற்கும் தகவமைப்பதற்கும், தேவைப்படுகின்ற அறிவு, அனுபவம் மற்றும் உபகரணங்களின் ஓட்டங்களை உள்ளடக்கிய ஒரு பரந்த செயல்முறைகள். | |

iihs®

INDIAN INSTITUTE FOR
HUMAN SETTLEMENTS

**IIHS BENGALURU CITY CAMPUS**
197/36, 2nd Main Road, Sadashivanagar, Bengaluru 560 080. India.
T +91 80 6760 6666 | F +91 80 2361 6814

**IIHS CHENNAI**
Floor 7A, Chaitanya Exotica, 24/51 Venkatnarayana Road, T Nagar
Chennai 600 017. India. T +91 44 6630 5500/6555 6590

**IIHS DELHI**
803, Surya Kiran, 19, Kasturba Gandhi Marg, New Delhi 110 001. India.
T +91 11 4360 2798 | F +91 11 2332 0477

**IIHS MUMBAI**
Flat No. 2, Purnima Building, Patel Compound, 20-C, Napean Sea Road
Mumbai 400 006. India. T +91 22 6525 3874

**iihs.co.in**